Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

போன: 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆனி 2 ஆம் நாள் முஹர்ரம் 2 (16-6 61) வெள்ளிக்கிழமை இதழ் 105

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்—2.

ஸ்தலஸ்தாபனசேவை

# 30,000 சிப்பந்திகளுக்கு

## சிங்கள மொழி உத்தரவு செல்லாது

## சட்டத்தை திருத்தினலே

## அதை அமுல் நடத்தமுடியுமாம்

கொழும்பு, வியாழன்

ஸ்தலஸ்தாபனங்களில் வேலைபார்க்கும் 30 ஆயிரம் சிப்பந்திகள் சிங்கள மொழியில் திறமை பெறவேண்டுமென்று ஸ்தலஸ்தாபன கமிஷன் வெளியிட்ட உத்தரவு செல்லுபடியாகாதென்றும், அதை அமுல்நடத்த முடியாதென்றும், ஸ்தலஸ்தாபன சேவையைச் சேர்ந்த பெரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஸ்தலஸ்தாபனகமிஷனின் இந்த உத்தரவை அமுல் நடத்த வேண்டுமாயின் முதலில் ஸ்தலஸ்தாபனசேவை கமிஷன் சட்டத்தையும், அந்த சேவை விதிகளையும் திருத்த வேண்டுமென்றும், கமிஷனின் உத்தரவுப்படி சிங்களத்தில் வேலைசெய்ய முடியாதவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாதென்றும் அதே அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## குருஷேவின் பேச்சு இன்று உலகெங்கும் ஒலிபரப்பாகும்

மாஸ்கோ, ஜூன் 15

ஜனதிபதி கென்னடியுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றி திரு. குருஷேவ் விடுத்த அறிக்கை நாளை டெலிவிஷன், ரேடியோ நிலையங்கள் மூலம் உலகெங்கும் ஒலிபரப்பப்படும். கிழக்கு ஐரோப்பிய ரேடியோ, டெலிவிஷன் நிலையங்களும் இதை அஞ்சல் செய்யும். ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் உள்ளிட்டு பல மொழிகளிலும் அது பெயர்க்கப்படடு உலகெங்கும் ஒலிபரப்பாகும்.

## ரஷ்யாவுக்கு புறப்படுகிருர்

### களனி கங்கை திட்டத்தை பூர்த்தி செய்ய

கொழும்பு, வியாழன்

நீர்ப்பாசன இலாகா டைரக்டர் திரு. குணசேகரா, களனி கங்கை பல நோக்க திட்ட ஒப்பந்தத்தைப்பற்றிய முடிவான பேச்சுகள் நடத்த இம் மாதம் ரஷ்யாவுக்குப் புறப்படுகிருர்.

## செனட்டில் 20 மசோதாக்கள் அங்கீகாரம்

கொழும்பு, வியாழன்

செனட்சபை, தன் நிகழ்ச்சி நிரலில் இருந்த 20 மசோதாக்களை அங்கீகரித்தது. மேலும் 2 மசோதாக்கள் இன்னும் அங்கீகரிக்கப்பட இருக்கின்றன. தேயிலை ஆராய்ச்சி திருத்த மசோதா, ரப்பர் ஆராய்ச்சி திருத்த மசோதா ஆகிய இரண்டுமே அவைகள்.

## இலங்கைக்கு அமெரிக்க விவசாய உதவி

### ஜனதிபதி கென்னடியுடன் தூதுகோஷ்டி சம்பாஷணை

வாஷிங்டன், ஜூன் 15

அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் இலங்கைப் பார்லிமெண்ட் தூதுகோஷ்டி, வெள்ளை மாளிகையில் ஜனதிபதி கென்னடியைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

'இலங்கைக்கு விவசாய உதவி அளிப்பதுபற்றியே ஜனதிபதி கென்னடியுடன் பிரதானமாக விவாதிக்கப்பட்டது என தூதுகோஷ்டித் தலைவர் திரு. ஸி. பி. டி' சில்வா, பின்பு நிருபர்களிடம் தெரிவித்தார். அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு பல வழிகளில் ஊக்கமளிப்பதுபற்றி ஜனதிபதியுடன் விவாதிக்கப்பட்டதாயும் திரு. ஸி. பி. டி' சில்வா குறிப்பிட்டார். இலங்கையில் உணவு அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமாக ஜனதிபதிக்கு விளக்கப்பட்டதென்றும், அமெரிக்க உதவிபற்றியும் விவாதிக்கப்பட்டதென்றும் திரு. சில்வா குறிப்பிட்டார்.

இலங்கைத் தூதுகோஷ்டி ஜனதிபதியைச் சந்தித்தபோது இலங்கையிலுள்ள அமெரிக்க உதவித் திட்ட அதிபரும் உடனிருந்தார்.

## 'புதிய பாடசாலைகளை பொறுப்பேற்க மாட்டோம்'

### கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

பெற்ருேர்-ஆசிரியர் சங்கங்கள், அல்லது கிராமாபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன அமைக்கும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்காது என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

புதிய பாடசாலைகள் எதையும் மேற்கொள்வதில்லை என தேசியக் கல்விக் கமிஷன் தீர்மானித்திருப்பதால் புதிதாக பாடசாலைகளை அமைக்கவேண்டாம் என கிராமாபிவிருத்திச் சங்கங்களை அது கேட்டுக்கொள்கிறது. புதிதாகப் பாடசாலைகளை அமைந்து அவற்றை கல்விப்பகுதிக்குக் கைமாற்றிக் கொடுக்கும் எண்ணத்தைக் கைவிடுமாறும் அது கேட்டிருக்கிறது.

## மக்கள் வங்கியில் பங்குகள் வாங்கும் கூட்டுறவு சங்கங்கள்

### முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கோரிக்கை

கொழும்பு, வியாழன்

மக்கள் வங்கியில் பங்குகள் கொள் முதல் செய்வதற்கான ஏற்பாடுகள் துரிதமடைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது. மொத்தம் 1 லட்சத்து 20 ஆயிரம் பங்குகளில் பாதி அரசாங்கத்துக்கும், பாதி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சொந்தமாக்கப்படும். பங்குகள் வாங்க விரும்பும் கூட்டுறவுச் சங்கங்கள் துரிதமாக முன்கூட்டியே தங்கள் பங்குகளைப் பதிவு செய்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளன.

## 2000 தொழிலாளருக்கு நிரந்தரமான வேலை

கொழும்பு, வியாழன்

வேலையற்ருேர் கஷ்ட நிவாரண திட்டத்தில் இப்போது 2000 தொழிலாளருக்கு மேல் வேலை செய்துவருகிருர்கள். அவர்களை நிரந்தரமாக அரசாங்க வேலைத் திட்டங்களில் அமர்த்தவேண்டுமென்று பிரதமருக்கு நிதி மந்திரி சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 'டாக்டர் ஞானலிங்கத்தை மாற்றவேண்டாம்'

### மந்திரிக்கு ஊழியர் சங்கம் வேண்டுகோள்

பரந்தன், வியாழன்

'சகல நிபுணர்களாலும் உதவாது எனக் கைவிடப்பட்ட தொழிற்சாலை ஒன்றை தொடர்ந்து உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையாக்கிய டாக்டர் எஸ். ஞானலிங்கத்தின் பெயர் சரித்திரத்தில் இடம்பெறும்' என பரந்தன் ரஸாயனத் தொழிற்சாலை ஊழியர் சங்கப் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் சங்கத் தலைவர் திரு. என். இராமநாதன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

"டாக்டர் ஞானலிங்கம் கண்காணித்து வந்தது போல் தொழிற்சாலையை அதேகவனத்துடன் ஊழியர்களெல்லோரும் கவனித்துவரவேண்டும். டாக்டர் ஞானலிங்கத்தின் சேவையை இங்கு நீடிக்கச் செய்யுமாறு கைத்தொழில் மந்திரியைக் கேட்பதற்கான நடவடிக்கையைச் சங்கம் எடுத்து வருகிறது."

சங்கக் காரியதரிசி திரு. கே. விநயகமூர்த்தி பேசுகையில் டாக்டர் ஞானலிங்கம் தொழிற்சாலையின் முன்னேற்றத்துக்கு உதவியதோடு தொழிற்சாலையிலுள்ள தொழிற்சங்கத்தையும்

(5-ம் பக்கம் பார்க்க)

## விவாகம் ஆகாத ஒருலட்சம் தாய்மார்கள்!

### குழந்தைகளை பிச்சைக்காரருக்கு விற்கின்றனர்!

கொழும்பு, வியாழன்

சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையின்படி, இப்பொழுது நாட்டில், ஒரு லட்சத்திற்கும் அதிகமான விவாகம் ஆகாத தாய்மார்கள் இருக்கின்ருர்கள். சுகாதார அதிகாரிகள் சமூகசேவா மன்றங்களின் உதவியுடன் விடுத்த அறிக்கையின்படி மணமாகாத தாய்மார்கள் தாங்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளை அந்த அந்த ஆஸ்பத்திரியிலேயே நிராகரித்துச் சென்றுவிடுகிருர்கள். அல்லது பிச்சைக்காரர்களுக்கு தங்களின் குழந்தைகளை விற்றுவிடுகின்ருர்கள். இன்றேல் அனதைக் குழந்தைகளின் மடத்தில் சேர்த்து விடுகிருர்கள்.

இக்குழந்தைகளைச் சிலர் தாம் வளர்ப்பதாகக் கூறி எடுத்துச் சென்று அவர்கள் வீட்டில் வேலைசெய்ய அமர்த்திக்கொள்கிருர்கள்.

சமூக சேவா மன்றங்கள் இத்தகைய திருமணமாகாத தாய்மார்களின் குறைகளைப் போக்க அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க அதிக வசதிகள் ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியிருக்கின்றது.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

### கேள்விப்பத்திர அறிவித்தல்

பூநகரி, தம்பிராய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு நெற் கிட்டங்கி கட்டுவதற்காக தென் யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கேள்விப் பத்திரங்கள் 1961ம் ஆண்டு ஆனி மாதம் 25-ம் தேதி காலை 12 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பும் உறையின் இடதுபக்க மூலையில் "நெற் கிட்டங்கிக்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி (பரந்தன் கிளை) யில் ரூபா 50-00 கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கொடுக்கப்பட்ட பற்றுச்சீட்டு காண்பிப்பதன்பேரில், பரந்தன் தென் யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 1961ம்ஆண்டு ஆனி மாதம் 20ம் திகதி காலை 10 மணி வரையும் கேள்விப் பத்திரப் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கட்டடத்தின்மாதிரிப் படத்தை தென் யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

இவ்வேலையைஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள் என்பதை அத்தாட்சி பண்ணுபவர்களுக்கே இதற்குரிய பத்திரங்கள்வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தாம் ஒப்புக் கொண்ட ஒப்பந்தத் தொகையில் 5வீதத்தைப் பிணைப் பணமாகக் கட்ட வேண்டும். கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் வேலையை ஏற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

மேலதிக விபரங்களை தென் யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(ஒப்பம்) வே. சு. பொன்னையா,
தென் யாழ்ப்பாணக்
கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்.

கூட்டுறவு அலுவலகம்,
பரந்தன். 12-6-1961,

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரிபூரணானந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

### றப்பர் ஸ்டாம்புகள்

றப்பர் ஸ்டாம்பு வேலைகள் மிகத்திறமான முறையில் ஒரு நாள் தவணையில் செய்து கொடுக்கப்படும் - கலாஜோதி கைத்தொழில், 147, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 195-ம் இலக்க வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு விடப்படும். (இந்துக் கல்லூரிக்கு சமீபம்) விபரங்கட்கு: S. தெய்வேந்திரன். கொன்ஞக்ரர், உரும்பிராய்.

### தேவை

தங்கள் தங்கள் ஊரிலிருந்து சுலபமாக மாதம் ரூபாய் 300-00க்கு மேல் வருமானம் வரக்கூடிய உத்தியோகம் செய்வதற்கு, இலங்கை முழுவதிலும் திறமையுள்ள ஆண்பாலாரும் பெண்பாலாரும் தேவை. தங்கள் முழு விபரங்களையும் 20சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும்: பெட்டி எண். 21, c/o ஈழநாடு, த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண மாநகரசபை

### சோலைவரி-2-ம்கந்தாயம் 1961

1961-ஆம் ஆண்டு 2-ஆம் கந்தாயத்துக்கான சோலை வரிப் பணம் 1961ஆம் ஆண்டு ஆனி மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமைபிற்பகல் 3 மணிக்கு முன்னர் மாநகர சபை அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிக்கப்பட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் கூடுதலாக 10% (வீதம்) வெளியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், மனியோடர்கள், போஸ்டர் ஓடர்கள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும். இவ்விதம் பணம் அனுப்பப்படும் பொழுது வீட்டு இலக்கம், தெருப் பெயர், வட்டார இலக்கம் முதலியவிபரங்களும் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

கட்ஷன் செல்வராசா
மாநகரசபை
ஆணையாளருக்காக.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 13-6-61.

### தேவை

யாழ்ப்பாணத்தில் விற்பனைக்குள்ள பழைய ஓடுகள், தகரங்கள் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விலை விபரத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் x 20, ஈழநாடு, த.பெ.எண் 49,யாழ்ப்பாணம்.

### தேவை

நன்ருகப் பாவித்த பி. எஸ். ஏ. 2.5 அல்லது 3.5 மோட்டார் பைசிக்கில் தேவை. தொடர்பு கொள்ள வேண்டியவர்: வ. மகாலிங்கம், உரும்பிராய் இந்துக்கல்லூரி, அல்லது நெல்லியடி, கரவெட்டி.

## பிச்சைக்காரர் தொல்லை

### புதியசட்டம் வரும்

கொழும்பு, வியாழன்

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை ஆகிய வர்த்தகப் பகுதிகளிலிருந்து பிச்சைக்காரர் தொல்லைகளை விரைவில் ஒழிப்பதற்கான திட்டமொன்றை சமூக சேவை இலாகா தயாரித்து வருகிறது.

இப்பகுதியிலிருந்து பிச்சைக்காரரை வேறிடத்துக்கு அகற்றுவதற்கு பொலிஸ்காரருக்கு அதிகாரம் வழங்கக்கூடிய இத்திட்டத்தை உள்நாட்டு மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா விரைவில் பார்லிமெண்டில் ஒரு மசோதாவாகச் சமர்ப்பிப்பார்.

# "ஆங்கிலம் கட்டாய பாடமாக இனியும் இருக்கவேண்டும்"

## தேசிய கல்விக் கமிஷனுக்கு கல்லூரி அதிபர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

**ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாகத் தொடர்ந்து கற்பிக்கப் படவேண்டுமென்று வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கம் தேசியகல்விக் கமிஷனுக்குச் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் குறிப்பிட்டுள்ளது.**

**பாடசாலைப் புனரமைப்புத்திட்டம் தங்கள் பிள்ளைகளைத் தாங்கள் விரும்பிய பாடசாலைகளில் சேர்ப்பதற்குப் பெற்ருேருக்குத் தடையாக இருக்கக்கூடாதென்றும் கல்லூரி அதிபர்கள் தங்கள் மகஜரில் கேட்டுள்ளனர்.**

வடமாகாண கல்லூரிஅதிபர்கள் சங்கம் தனது நீண்ட அறிக்கையில் பாடசாலை புனரமைப்பு, வசதிக் கட்டணம், பாடத்திட்டம், பாடசாலை விடுதிகள், பாடசாலைப் பிரவேச வயது, பரீட்சைகள் ஆகியவைகள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளது. அவைகளில் முக்கியமான சில அம்சங்கள் வருமாறு:-

### கல்வியின் உட்பொருள்

எங்களுடைய பள்ளிக்கூடங்களின் அமைப்பு முறை எமது கல்வித் திட்டத்தின் இலட்சியங்களுக்கேற்ப அமைய வேண்டும். நாட்டு மக்களுக்கு மிகுந்த அறிவுதரக்கூடிய கல்வி முறையா அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட சிலரை மாத்திரம் நாட்டின் தலைவர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் மாற்றக் கூடிய கல்வி முறையா வேண்டும்? அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் அனுபவங்களை வைத்துப் பார்த்தால் தெரிந்தெடுக்கப்பட்ட சிலரை மாத்திரம் விஞ்ஞானிகளாகவும் தலைவர்களாகவும் ஆக்கும் கல்வித்திட்டம் பயனற்றதாகத் தெரிகிறது. தமக்குக் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் இந்த நாடுகள் கல்வித்திட்டங்களை மாற்றி அமைப்பதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கின்றன. இன்றைய கட்டத்தில் நாம் கல்வியின் உட்பொருளை நன்ருக அறிந்துகொள்ள வேண்டும்.

### பள்ளிக்கூடப் பிரிவுகள்

பொதுவாகப் பள்ளிக்கூடங்களை 5ம் வகுப்புவரை ஆரம்ப பாடசாலைகள் என்றும், 5ல் இருந்து ஜி. சி. ஈ. சாதாரண வகுப்புவரை சிரேஷ்ட பாடசாலைகள் என்றும் பிரிக்கலாம். ஆனல் இரண்டு பிரிவுகளும் ஒரே பள்ளிக்கூடத்தில் அமைந்திருப்பது இட நெருக்கடியையும் மாணவர் தொகையையும் அதிகரிக்கச் செய்திருக்கிறது. மாணவர்களுக்கிடையில் வயதில் ஏற்றத் தாழ்வு இருப்பதால் வயதுக்கேற்றபடி மாணவர்களை பிரித்துவைப்பது உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும்.

எங்களுடைய அபிப்பிராயப்படி ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் சிரேஷ்ட பள்ளிக்கூடங்களும் தனித்தனியே இயங்க வேண்டும். சுயபாஷைப் பள்ளிக்கூடங்கள் அதிகமாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களாகத்தான் இருக்கின்றன. கவலைக்கிடமான நிலையிலுள்ள பள்ளிக்கூடங்களைத்திருத்திஅமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை கையாளவேண்டும். ஆரம்பப் பாடசாலைகளின் கட்டிடங்கள், சூழல், விளையாட்டு மைதானம், விளையாட்டுக்கள் எல்லாம் மாணவர்களின் சுவை உணர்ச்சியையும்வாழ்க்கையின் சரியான பண்புகளையும் அறியும்படி அமைந்திருத்தல் அவசியம்.

சிரேஷ்ட பள்ளிக்கூடங்களை அமைக்கும்போது நாம் அதிக தொகையான மாணவர்களைச் சேர்க்கக்கூடாது. சிரேஷ்ட பள்ளிக்கூடங்களில் 500க்குக் குறையாமலும் 700 க்கு மேற்படாமலும் மாணவர்கள் இருக்கலாம் என இந்திய சிரேஷ்ட பள்ளிக்கூடக் கமிஷனின் அறிக்கை கூறியிருப்பது எமது கவனத்திற்குரியது. ஆனல் பள்ளிக்கூடங்கள் நுண்கலை, வணிகம், தொழிற்கல்வி முதலியவற்றைப் பாடத்திட்டத்தில் சேர்த்துக்கொண்டால் 1000மாணவர்களை வைத்திருக்கலாம் என கமிஷன் அறிக்கையிற் கண்டிருக்கிறது.

பள்ளிக்கூடபுனருத்தாரணம் பிள்ளைகளைப் பெற்ருேர் விரும்பிய பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் சுதந்திரத்தைத் தடை செய்யக்கூடாது. ஒரு மாவட்டத்திலுள்ள பிள்ளைகள் வேருெரு மாவட்டத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் சேர்வதற்கு இலங்கையில் கூடத் தடை கிடையாது.

### தனித்தியங்கும் பாடசாலைகள்

எல்லா ஜனநாயக நாடுகளிலும் தனித்தியங்கும் பாடசாலைகளுக்கு நாட்டின் கல்வித் திட்டத்தில் இடமுண்டு. இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் எங்கள் நாட்டில் இயங்க ஆதரவு தரக்கூடாது என்று கூறுவதின் அர்த்தம் எங்களுக்கு விளங்கவில்லை. கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களில் வித்தியாபகுதியின் தலையீடு இல்லாமல் தனிப்பட்ட பள்ளிக்கூடங்கள் பயனுள்ள பரிசோதனைகள் மேற்கொள்ளக் கூடும். தனிப்பட்ட பள்ளிக்கூடங்கள் எங்கள் தேசிய கல்வித் திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு வித்தியாசங்கள் காட்டுவது வளர்ச்சியைத் தடை படுத்தக் கூடும்.

### பாடத்திட்டம்

மாணவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றபடி தெரிவு செய்து படிக்கக் கூடியதாக பல பாடங்களையும் பாடத்திட்டத்தில் இருக்கவேண்டும். தேவைக்கேற்றபடி பல பாடங்களையும், படிப்பிக்கக்கூடியதாக விரிவான பாடத்திட்டம் பல்கலைகள் பயிற்சி தரும் பள்ளிக்கூடங்களில் இருப்பது அவசியம்.

விஞ்ஞானம், வாணிபம், வர்த்தகம், பொறி இயல், குடிசைக் கைத்தொழில், வீட்டுப்பணி, விவசாயம், நுண்கலை ஆகிய பாடங்களின் அடிப்படையில் விரிவான பாடத்திட்டத்தை வைத்திருக்கலாம். இன்றிருப்பதுபோல் இரண்டாம்வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்கப் படல்வேண்டும். பலவருடப்பரிசோதனையின் பின்னர் இந்தியர்கள் ஆங்கில பாடம் ஆரம்ப வகுப்புகளிலேயே ஆரம்பிக்கப் படல்வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். பல மாகாணங்களில் ஆறும் வகுப்பிலிருந்தல்லாமல் நாலாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிப்பதாகத் தீர்மானித்துவிட்டார்கள். பிள்ளைகள் சிறுபிராயத்திலேதான் மொழிகளை இலகுவில் கற்றுக்கொள்ள முடியும் என்பதிஞலேயே இந்த நடவடிக்கை யெடுத்துள்ளார்கள்.

தேசியமொழிகளில் போதிய விஞ்ஞான நூல்கள் இல்லாதபடியால் விஞ்ஞானத் துறையில் உயர்தரக்கல்வியை ஆங்கிலத்தில்தான் இன்னும் பல வருஷங்களுக்குப் பயிற்ற வேண்டியிருக்கிறது. புத்தகங்கள் பிரசுரமாகும் வேகம் பல காரணங்களால் மந்தகதியில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மொழி பெயர்ப்பால் மாத்திரம் புத்தகங்களின் தேவையைச் சமாளிக்கமுடியாது. புதிய நூல்கள் எழுதப்படல்வேண்டும். இதற்குக் காலதாமதமாகும்.

### ஆங்கிலப் பயிற்சி

இன்னும் சொற்பகாலத்திற்காவது ஆங்கிலத்தில்பல்கலைக் கழகக் கல்வி ஆங்கில நூல்களில்தான் தங்கியிருக்கவேண்டும். ஆகையால் மாணவர்களுக்கு ஆங்கில அறிவு போதிப்பது அவசியமாகும்.

ஆங்கிலத்தை நன்கு பயிற்றுவதற்கு நல்ல பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தேவை. பயிற்றப்படாத ஆசிரியர்களால் பல தீங்குகள் நேரிடக்கூடும். ஆகவே அரசாங்க கல்வி துறையினர் ஆங்கில ஆசிரியர்களுக்கு விசேஷ பயற்சியளிக்கும் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இந்தியாவிலுள்ள பல கல்லூரிகளிலும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் போதிக்க நடத்தியுள்ள ஆராய்ச்சிகளை இலங்கை பின்பற்றுமேயானல் இலங்கைக்குப் பயனுண்டு.

### பரீட்சைகள்

நல்லதரமுடைய பாடசாலைப் பரீட்சையொன்று கீழ்வரும் இரண்டு நிபந்தனைகளிலும் திருப்தியளிக்க வேண்டும்.

1. மாணவன்பயிலவேண்டியதில் எவற்றை அறிந்து கொண்டான் என்பதை எடைபோட்டுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

2. நல்ல முறையான படிப்பில் ஆர்வத்தையும் அறிவாற்றலை விருத்தி செய்வதற்குத் தூண்டுதலையும் அளிக்க வேண்டும்.

பல பரீட்சைகள் முதலாவது நிபந்தனையில் கவனம் செலுத்தியுள்ளன. இரண்டாவது நிபந்தனையைக் கவனிக்காதும், சில வேளைகளில் நீக்கியும் உள்ளன.

ஒரே மாதிரியான கல்வி முறையானபடியால் எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் பொதுவான தகுதிகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.

இப்போது ஒரு வகுப்பின் தரம் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபட்டதாகவுள்ளது. இதன் காரணமாக ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து இன்னுமொரு பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது புகுமுகப் பரீட்சைகள் வைக்க வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவான பாடத்திட்டம் இருந்தால் இதைத் தடுத்துக் கொள்ளலாம். முக்கிய வகுப்புகளில் பொதுவான பரீட்சைகளும் வைத்தல் வேண்டும். ஆரம்ப பாடசாலையிலிருந்து கனிஷ்ட பாடசாலைக்கு மாறுவதற்கு உதவியாக ஐந்தாம் வகுப்பில் ஒரு பொதுத் தராதரப் பரீடசை நடாத்தலாம். அதுபோல எட்டாம் வகுப்பில் ஒரு தராதரப் பரிட்சை நடாத்தி கனிஷ்ட பாடசாலைப் படிப்பின் முடிவை அளந்து கொள்ளலாம். மாகாணப் பிரிவுகளின் அடிப்படையில் இப் பரீட்சைகளை ஆசிரியர்களும் ஆசிரிய சங்கங்களும் நடாத்தலாம்.

### ஜி. ஸி. ஈ.

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சை நாடாத்தும் முறையில் குறைபாடுகள் உள்ளன. பரீட்சை முடிவுகள் வெளிவரக் காலதாமதமாகிறது. ஒரு தரப்

(8ம் பக்கம் பார்க்க)

# ஜெனிவா மகாநாடு லாவோஸ்பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டுவிடும்

## மேனன் நம்பிக்கை

புதுடில்லி, ஜூன் 15

லாவோஸ் பிரச்சினைக்கு ஜெனிவா மகாநாட்டில் ஒரு விதமான உடன்பாடு ஏற்பட்டு விடுமென்று இந்திய பாதுகாப்புமந்திரியும், ஜெனிவா மகாநாட்டில் இந்திய தலைமைப் பிரதிநிதியுமான திரு. கிருஷ்ணமேனன் இன்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொண்டபின் திரு மேனன் இன்று புதுடில்லிக்குத் திரும்பி வந்தார்.

அமைதியும் சுதந்திரமுள்ள நடுநிலைமை நாடாக லாவோஸ் விளங்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதுதான் ஜெனிவாவில் நடைபெறும் 14 நாடுகளைக்கொண்ட சர்வதேசக் கமிஷன் மகாநாட்டின் நோக்கம் என்று திரு. மேனன் தெரிவித்தார்.

லாவோசுக்கு வெளியிலிருந்து ஆயுதங்களும் துருப்புக்களும் வராமல் தடுப்பதுதான் லாவோஸிலுள்ள கட்டுப்பாட்டுக் கமிஷனின் வேலையேயன்றி லாவோஸின் உள்நாட்டு ஆட்சியிலும் அதன் சுயநிர்ணய உரிமையிலும் தலையிடுவதல்லவென்று திரு. மேனன் கூறினார்.

சனிக்கிழமை சூரிச் என்ற இடத்தில் லாவோஸின் முத்தரப்புத் தலைவர்களும் சந்தித்துப் பேசுவதனால் லாவோஸில் கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக ஒரு நல்ல முடிவு ஏற்படுமென்று திரு. மேனன் நம்பிக்கை தெரிவித்தார்.

லாவோஸில் அரசாங்கம் அமைத்துவிட்டால் சண்டை நிறுத்தப் பிரச்சினை முற்றுகத் தீராவிட்டாலும் குறைந்துவிடுமென்றும் திரு. மேனன் தெரிவித்தார்.

லாவோஸ் அரசாங்கம் அவசியமெனக் கருதினுலொழிய லாவோஸில் அந்நிய இராணுவத் தளங்களிருக்கக்கூடாதென்று திரு. மேனன் கூறினுர்.

நிருபரின் ஒரு கேள்விக்கு திரு. மேனன் பதிலளிக்கையில் ஜெனிவா மகாநாடு முறிந்துவிடாமல் தொடர்ந்து நடைபெறுவது ஒரு திருப்திதான் என்று கூறினுர்.

லாவோஸ் பிரச்சினைக்கு இந்தியா குறிப்பான யோசனையெதையும் தெரிவிக்கவில்லையென்றும் பொதுவான வழிவகைகளைத் தெரிவித்ததென்றும் திரு. மேனன் சொன்னுர்.

### அன்னியரை அனுமதியோம்

ஜெனிவா மகாநாட்டில் லாவோஸின் நடுநிலைமைப் பிரதமர் இளவரசர் சுவன்னபூமா நேற்று முதல்தடவையாகப் பேசியபோது "எங்கள் மண்ணில் அந்நியத் துருப்புக்களை அனுமதிக்கமாட்டோம். அந்நிய இராணுவ முகாம்களையும் அங்கு வைத்திருக்க அனுமதியோம்" என்று கூறினுர்.

"லாவோஸின் நடுநிலைமையை நாங்கள் இனிப் பிரகடனப்படுத்துவோம்." இராணுவ கூட்டுகளில் சேரவிரும்பாத எங்கள் விருப்பத்தையும் நாங்கள் அறிவிப்போம்" என்று இளவரசர் சுவன்னபூமா தெரிவித்தார்

ஜெனிவா மகாநாடு நல்ல பயன்கொடுக்குமென்று நம்பிக்கை தெரிவித்த இளவரசர் சுவன்னபூமா சனிக்கிழமை சூரிச்சில் நடைபெறும் முத்தரப்பு 'உச்சி' மகாநாட்டின் பயனை ஜெனிவா மகாநாட்டுக்கு, லாவோஸ் அரசாங்கத்தின் சார்பில் ஒரு பிரதிநிதி அனுப்பக்கூடியதாக இருக்குமென்றும் தெரிவித்தார்.

லாவோஸின் இடதுசாரித் தலைவர் இளவரசர் சொவன்னவாங் பேசுகையில் அந்நிய துருப்புக்களுக்கு லாவோஸில் இடம்கொடுக்க முடியாது என்ருர்.

— —

# சென்னையில் லட்சுமீமேனன்

## திபேத் அகதிகள் பற்றிஆலோசனை

சென்னை, ஜூன் 15

இந்தியஉதவி வெளிவிவகார மந்திரி திருமதி லட்சுமிமேனன் இன்று சென்னையில் தமிழ்நாட்டின் பொலிஸ் இலாகா மந்திரி திரு. எம். பக்தவத்சலத்தை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர். திபேத் அகதிகளுக்குப் புனர் வாழ்வளிப்பது சம்பந்தமாக இவர்கள் பேசியதாகத் தெரிகிறது.

# காங்கோபார்லிமெண்ட் லியப்போல்ட்வில்லியில்கூடும்

## நிபந்தனைகளுடன் லுமும்பா ஆதரவு அரசாங்கம் ஒப்புக்கொண்டது

லியப்போல்ட்வில்லி, ஜூன் 15

காங்கோ பார்லிமெண்டை லியப்போல்ட்வில்லியில் கூட்டுவதற்கு ஸ்டான்லிவில்லி அரசாங்கம் சில நிபந்தனைகளுடன் ஒப்புக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

காங்கோ பார்லிமெண்டை மீண்டும் கூட்டுவது சம்பந்தமாக லுமும்பா ஆதரவுள்ள ஸ்டான்லிவில்லி அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் லியப்போல்ட்வில்லி அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்குமிடையில் சென்ற சில வாரங்களாக பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது.

காங்கோ பார்லிமெண்ட் நடுநிலைமைப் பிராந்தியம் ஒன்றில் கூடவேண்டுமென்று ஸ்டான்லிவில்லி அரசாங்கம் கூறிவந்தது.

பேச்சுவார்த்தைகளின் பின் லியப்போல்ட்வில்லியில் பார்லிமெண்ட் கூடுவதற்கு ஸ்டான்லிவில்லி அரசாங்கப் பிரதிநிதிகள் சில நிபந்தனைகளுடன் ஒப்புக்கொண்டுள்ளனர்.

லியப்போல்ட்வில்லியில் பார்லிமெண்ட் கூடும்பொழுது லியப்போல்ட்வில்லி அரசாங்கத்தின் காங்கோலியத் துருப்புகள் அங்கிருந்து வெளியேற்றப்படவேண்டுமென்றும், ஐ. நா. துருப்புக்கள் மட்டுமே அங்கிருக்க வேண்டுமென்றும் ஸ்டான்லிவில்லி அரசாங்கப் பிரதிநிதிகள் நிபந்தனை விதித்துள்ளனர். ஐ. நா. துருப்புக்களின் பாதுகாப்புடனேயே பார்லிமெண்ட் கூடவேண்டுமென்று அவர்கள் நிபந்தனை விதித்துள்ளதாக அறியப்படுகிறது.

# அல்ஜீரியாவில் முஸ்லிம்கள் பொலிசார் மோதல்

வாஷிங்டன், ஜூன் 15

அல்ஜீரியாவின் எதிர்காலம் பற்றி அல்ஜீரிய தேசியத் தலைவர்களுக்கும் பிரஞ்சு அரசாங்கத்துக்கு மிடையில் ஈவியனில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மீண்டும் விரைவில் ஆரம்பமாகுமென்று வாஷிங்டனில் ராஜாங்க காரியாலயம் நம்பிக்கை தெரிவித்தது.

அல்ஜீரியாவில் நேற்று தேசியவாதிகளுக்கும் பொலிசாருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டதில் ஒரு பொலிஸ்காரரும் ஒரு முஸ்லிமும் காயமடைந்தனர்.

பொலிஸ்காரர் ஒருவரை ஒரு முஸ்லிம் கேலிசெய்ததாகவும் இதற்கு அந்தப் பொலிஸ்காரர்கைத்துப்பாக்கியைஎடுத்துக் காட்டிப் பயமுறுத்தியதைத் தொடர்ந்து பொலிஸ்காரர்மீது கற்களும் பழுங்களும் வீசப்பட்டதாகவும், இச்சம்பவம் பெல்கோட் என்ற ஒரு நகரத்தின் சந்தையில் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் கார்களைப் புரட்டியும், கற்களை வீசியும் பொலிஸ்காரர்களைத் தாக்கியும் கலகம் செய்தனராம். ஒரு மோட்டார் காருக்குத் தீவைக்கப்பட்டதாகவும அறிவிக்கப்படுகிறது.

பின்னர் பாதுகாப்புப்படையினர் ஸ்தலத்துக்கு விரைந்து அமைதியை நிலைநாட்டியதாகக் கூறப்படுகிறது.

— —

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டேன்வெயர் குழாய்கள்

★ பயர் பிறிக்ஸ்

செட்டிநாட்

கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,

கொழும்பு.

# பாகிஸ்தான் செய்திஸ்தாபனம்

## அரசாங்கம் எடுத்துக்கொண்டது

ராவல்பிண்டி, ஜூன் 15

பாகிஸ்தானின் முக்கிய செய்தி ஸ்தாபனமான 'அஸோசியேட்டட் பிரஸ் ஆப் பாகிஸ்தான் என்ற செய்தி ஸ்தாபனத்தை பாகிஸ்தான் அரசாங்கம் தனது அதிகாரத்தில் எடுத்துக்கொண்டது.

அரசாங்கம் நிதி உதவியளித்தும் நஷ்டத்திலேயே இந்த ஸ்தாபனம் நடந்துவந்ததாகவும் இதனுல்தான் அரசாங்கம் அதை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமேற்பட்டதாகவும் பாகிஸ்தான் அரசாங்கம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1959ம் ஆண்டு ஏப்ரல்மாதத்தில் பாகிஸ்தான் 'டைம்ஸ்' என்ற பத்திரிகையை அரசாங்கம் தனது அதிகாரத்தின்கீழ் முதலில் எடுத்தது.

## அல்ஜீரியா பற்றி சூ என் லாய்

பீக்கிங், ஜூன் 15

நவசீனவுக்கு விஜயம் செய்துள்ள இந்தோனேஷிய அதிபர் டாக்டர்சுகர்னேவுக்கு நேற்றிரவு அளிக்கப்பட்ட ஒரு பிரிவுபசார விருந்தில் சீனப் பிரதம மந்திரி திரு. சூ என் லாய் பேசுகையில் லாவோஸ், அல்ஜீரியா, அங்கோலா ஆகிய பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டார்.

லாவோஸ் சுதந்திர நடுநிலைமை நாடாக்கப்பட வேண்டுமென்றும் அல்ஜீரியாவுக்குப் பூரண சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்றும் அங்கோலா மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு சீனவின் பூரண ஆதரவுண்டென்றும் திரு. சூ என் லாய் கூறினுர்.

## சிகானுக் சூரிச் புறப்பட்டார்

பாரிஸ், ஜூன் 15

லாவோஸ் தலைவர்கள் மூவரும் ஒன்ருகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி அங்கு கலப்பு அரசாங்கம் ஒன்று அமைப்பதற்கு முயற்சி செய்த கம்போடிய பிரதமர் இளவரசர் நொரடம் சிகானுக் இன்று சுவிட்சலாந்திலுள்ள சூரிச் என்ற இடத்துக்குப் பிரயாணமானுர். சூரிச் என்ற இடத்தில் தான் லாவோசின் முத்தரப்புத் தலைவர்களும் சனிக்கிழமையன்று சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

— —

## ஊர்காவற்றுறை வாடி விடு

### நிலைமையைப்பற்றி புகார்

ஊர்காவற்றுறை, வெள்ளி

வசதியறறுக்கிடக்கும்ஊர்காவற்றுறை வாடிவீடு, அவ்வாடி வீட்டுப்பொறுப்பாளர் ஒருவர் மாத்திரம் காலந்தள்ளுவதற்காக மட்டும் இருந்துகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அங்குள்ள நீதிமன்றத்துக்குச்செல்லும் வழக்கறிஞர்கள் தங்கள் இல்லங்களிலிருந்து கொண்டுசெல்லும் பகல்போசனத்தை உண்பதற்கு ஏற்ற ஒரு இடமென்ற அளவில் அதற்கு மதிப்பளிக்கப்படுகிறது. இதிலிருந்து அவர்கள் எதுவித சிற்றுண்டியைத்தானும் பெறுவதற்கு ஏற்ற வசதி அங்கு அளிக்கப்பட்டிருக்கவில்லை.

பகல்போசனத்துடன் குடிதண்ணீரும் கொண்டுபோகாதவர்கள் சர்ப்பாட்டின் இடையில் உபத்திரவமும் அடையவேண்டியுள்ள்தாம். குடிதண்ணீர் வசதி, வசதியான மலசலகூடம், போதிய தளபாடங்கள் எதுவுமில்லாமல் இது உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறது. மழைகாலத்தில் வாடி வீட்டுக்குள்ளிருப்போரேகுடையின் உதவியை நாடவேண்டிய நிலையில் இது இருப்பது பற்றிப் புகார்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## மணிவாக்கு

மழைநீர் மேட்டில்நிற்பதில்லை. தாழ்ந்த நிலத்தை நோக்கியே பாய்கிறது. அதுபோலவே ஆண்டவனின் கருணை ஏழைகளின் உள்ளங்களில்இடங்கொள்கிறது. வீண் பெருமை கொண்டவர்களின் மனத்திலிருந்து நீங்குகின்றது.

— பரமஹம்ஸர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆனி மீ 2 உ (16-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## இலங்கைக்கு உல்லாசப் பிரயாணிகள்

இலங்கைக்கு உல்லாசப் பிரயாணிகளை அதிகமாக வரச் செய்ய எல்லா முயற்சிகளையும் எடுக்கவேண்டுமென்று வெளிநாடுகளுக்குச் செல்லும் ஐந்துஃதானிகர்களுக்கு பிரதமர் அறிவுறுத்தினர். இதுவரை இவ்விஷயம் அவ்வளவாக கவனிக்கப்படவில்லையென்றும் இனி நிலைமையைத் திருத்தி புதிதாக இவ்வேலைக்கு அதிக முக்கியம் அளிக்கவேண்டுமென்றும் அவர் கூறியது வரவேற்கத்தக்கது.

அழகான நமது நாட்டை நேரில் காண வெளிநாடுகளில் பலரும் ஆவலாக இருக்கின்ருர்கள். இது பற்றி மேலும் விளம்பரங்கள் செய்தால் அதிகமானவர்களை இங்கு வரச் செய்யலாம். ஆனல் இலங்கையின் சுங்க இலாகா குடியேற்ற இலாகா, முதலியவற்றின் கெடுபிடிகளை நினைக்கையில், நமக்கு சிரிப்புத்தான் வருகிறது. வெளிநாட்டவரை இங்கு வருமாறு வருந்தி அழைத்துவிட்டுஇங்குஅவர்கள் வந்ததும், பலவித இம்சைகளும் செய்வதாயின், அவர்கள் தங்கள் நாடு திரும்பி இங்கு யாருமே வரக்கூடாதென்று பிரசாரம் செய்து பழிவாங்கலாம்!

கள்ளக் கடத்தல்களைத் தடுக்கவேண்டியதுதான். என்ருலும் மிக இங்கிதமான முறையில், இதைச் செய்யவேண்டும். இங்கு வருபவர்களெல்லாரும் கள்ளக் கடத்தல்காரர்களல்லர். உல்லாசப் பிரயாணிகளையெல்லாம் சந்தேகித்து, சோதனைக்கு உட்படுத்துவதாயின், அவர்கள் ஆத்திரமடைந்து, இங்கு ஏன் வந்தோமென்று தங்களையே நொந்துகொள்ளக் கூடும். தவருக சந்தேகிக்கப்பட்டவர்களிடம் கஸ்டம்ஸ்காரர்கள் தங்கள் வருத்தம்தெரிவிக்கவேண்டும் இதில் நஷ்டமெதுவுமில்லை. வெளிநாடுகளிலிருந்து இங்கு யாத்திரையாக வருபவர்களை, நமது கண்யமிக்க விருந்தாளியாக மதித்து, அன்பாக நடத்தினல், யாத்திரிகர் பன்மடங்கு அதிகமாக இங்கு வருவர்.

மற்ருேர் வசதியீனம் தக்க ஓட்டல்கள் இங்கு இல்லாமைதான். 'றெஸ்ட் ஹவுஸ்' எனும் வாடிவீடுகள் சிலவற்றில் உணவு முதலிய வசதிகள் மிக மோசம். கட்டணங்களோ மிக அதிகம். யாழ்ப்பாணம் உள்ளிட்டு இலங்கையெங்கும், பலதேச யாத்திரிகர்களின் தேவைக்குத் தக்கவாறு ஓட்டல்களை அமைக்க அரசாங்கம் தனிப்பட்டவர்களுக்கு வசதி அளிக்கவேண்டும் இவ்விஷயத்தில் மிக முன்னேறியுள்ள இந்தியாவின் உதவியை நாம் நாடிப் பெறலாம்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சில வெளிநாட்டு யாத்திரிகர்கள், இங்குள்ள கடற்பாலங்கள், இயற்கை அழகு கொஞ்சும் தீவுகள் இவற்றைக் கண்டு மிகவும் கவர்ச்சியடைந்தனர். நம்மிடையேயுள்ள இயற்கை வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தி, வேண்டிய வசதிகள் செய்தால், அதிகமான உல்லாச யாத்திரிகர்கள் இங்கு தேடிக் கொண்டு வரலாம். பல இடங்களை, யாத்திரிகர் விரும்பித் தங்குமிடமாக்கலாம். வெறும் பிரசாரத்தால் மட்டுமன்றி, அன்புடன் அதிக வசதிகளைச் செய்வதன் மூலமே, உலக யாத்திரிகர்களை இங்கு அதிகம் வரச் செய்யவும், அதன்மூலம் வியாபாரமும், சுபீட்சமும் பெருகவும் வழிவகைகள் செய்ய முடியும்.

# ஒரு விநாடிக்கு ஆறு குழந்தைகள்பிறக்கின்றன

## உலக ஜனத்தொகை 40 வருடங்களில் இருமடங்காகும்!

உலகின் மொத்த சனத்தொகை இந்நூற்ருண்டு முடிவடைவதற்குமுன்300கோடியைத் தாண்டிவிடும் என்றும் கி. பி. 2000 ஆண்டில் 600 கோடியாக உயர்ந்துவிடும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இச் சனத்தொகைப் பெருக்கத்தால் உலகில் அல்லது பல நாடுகளில் இட நெருக்கடி ஏற்படுமா? தேவையான உணவைப் பெற்றுக்கொள்ள முடியுமா? முடியாதா? உடைகளை நெசவு செய்வதற்குத் தேவைப்படும் மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியுமா? தேவையான வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியுமா? வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, பட்டினி ஆகியவற்ருல் மக்கள் பெருமளவுக்குக் கஷ்டப்படாமல் இருப்பதற்கு வழிவகைகளை மேற்கொள்ள முடியுமா? இப்படியான பல பிரச்சினைகள் உலகிலுள்ள நாடுகளை எதிர்நோக்கியிருக்கின்றன. இவை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. வேறு பல நாடுகள் இவ் விஷயங்களில் போதிய கவனம் செலுத்தாமலிருக்கின்றன. பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்திருக்கும் நாடுகளும், வளம் நிறைந்திருக்கும் நாடுகளும் இப் பிரச்சினைகளை அதிக சிக்கல்களின்றி சமாளித்துக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கின்றன. பொருளாதார முன்னேற்றத்தில் பின்தங்கியிருக்கும் நாடுகளும்வளம் குன்றிய நாடுகளும் எவ்வாறு எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்போகின்றனவோ தெரியவில்லை.

### சனப்பெருக்கம்

கிறிஸ்து பிறந்த ஆண்டில் உலகின் மொத்த சனத்தொகை ஒரு கோடியாக இருந்ததாம்! அதாவது இப்போதுள்ள இலங்கையின் சனத்தொகையே அப்போது உலகின் சனத்தொகையாக இருந்திருக்கின்றது!

பின் வரும் புள்ளி விபரங்கள் உலகின் சனத்தொகை எவ்வாறு உயர்ந்துகொண்டு வந்திருக்கின்றது என்பதை உணர்த்துகின்றன:-

| | |
|---|---|
| 1492 | — 38,60,00,000 |
| 1776 | — 67,00,00,000 |
| 1840 | — 120,00,00,000 |
| 1914 | — 176,00,00,000 |
| 1940 | — 214,50,00,000 |
| 1954 | — 252,80,00,000 |
| 1959 | — 285,00,00,000 |
| 1961 | — 300,00,00,000 |

இன்னும் 39 வருடங்களுள் உலகின் சனத்தொகை இருமடங்கு பெருக்கம் அடையப்போகின்றது. சராசரியாக வருடந்தோறும் சனத்தொகை 1·3 சத வீதம் ஏறிக்கொண்டு வருவதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. 24 மணி நேரத்தில் சராசரியாக 1,20,000 வீதம் சனத்தொகை அதிகரித்துக்கொண்டுவருகின்றது. அதாவது ஒவ்வொரு இரண்டு விநாடிகளுக்கு மூன்று பேர் வீதம் உலகின் சனத்தொகை ஏறிக்கொண்டு போகின்றது!

### இடநெருக்கடி ஏற்படுமா?

உலகின் மொத்த நிலப்பரப்பு - 5,5,57,86,000 சதுர மைல்;நீர்ப்பரப்பு-14,10,50,000 சதுரமைல். இப்போதுள்ள உலகின் சனத்தொகைப்படி சராசரியாக ஒவ்வொரு மனிதனுக்கும் உலகில் 12 ஏக்கர் நிலம் இருக்கின்றது. இக் கணக்கில் உலகில் மனிதனுக்குப் பயன்படாத மிகவும் குளிர்ந்த துருவப்பகுதிகள், மிகவும் வறண்ட பாலைவனப் பகுதிகள், பாறைகள் வெளியரும்பியிருக்கும் இடங்கள் ஆகியன சேர்க்கப்பட்டிருப்பதால், இந்தச் சராசரி நிலத்தின் அளவைக் குறைக்க வேண்டும். இந்த நிலப் பகுதிகளுக்காக சுமார் 70 சத வீதத்தைக் குறைத்தால் ஒவ்வொரு மனிதனுக்கும் இவ்வுலகில் இப்போது பயன் படுத்தக்கூடிய நிலம் 4 ஏக்கர் சராசரியாக இருக்கின்றது. என்பது பெறப்படும். இதில் இப்போது சுமார் $1\frac{1}{8}$ ஏக்கரே பயிரிடப்பட்டு வருகின்றது. இன்னும் சுமார் 3 ஏக்கர் நிலம் பயிர் செய்யக் கூடிய நிலையில் சராசரியாக ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கின்றது.

### சில நாடுகளில் இடவசதி

மேலே கூறப்பட்டுள்ள முறையில் கணக்கிடும் பொழுது ஐக்கிய அமெரிக்காவில் (அலாஸ்கா உட்பட) ஒவ்வொரு மனிதனுக்கும் சராசரியாக 14 ஏக்கர் நிலம் இருக்கின்றது என்பதும் இப்போது இதில் சுமார் $3\frac{1}{2}$ ஏக்கர் நிலமே பயிரிடப்பட்ட நிலமாக இருக்கின்றது என்பதும் தெரியவருகின்றது. கனடாவில் தலைக்கு 150 ஏக்கர் நிலம் இருக்கின்ற போதிலும் நிரந்தரமாக மக்கள் குடியேற்றத்திற்குரிய நிலம் 25 ஏக்கரே இருக்கின்றது. இதில் சுமார் 4 ஏக்கரே இப்போது பயிரிடப்பட்ட நிலமாக இருக்கின்றது. பிரேசிலில் தலைக்கு 30 ஏக்கர் நிலம் இருக்கின்றபோதிலும் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலம் தலைக்கு 15-20ஏக்கர்வரைதான் இருக்கின்றது. இந்தியாவில் தலைக்கு $2\frac{1}{2}$ ஏக்கர் நிலமும், பாகிஃதானில் தலைக்கு $\frac{3}{4}$ஏக்கர் பயிரிடப்பட்ட நிலமும் இருக்கின்றன.

### இலங்கையில் நிலைமை

இலங்கையின் சனத்தொகை பின்வருமாறு ஏறிக்கொண்டு வந்திருக்கின்றது:-

| | |
|---|---|
| 1871 | — 24,00,380 |
| 1881 | — 27,59,738 |
| 1891 | — 30,07,789 |
| 1901 | — 35,65,934 |
| 1911 | — 41,06,350 |
| 1921 | — 44,98,605 |
| 1931 | — 53,06,871 |
| 1946 | — 66,57,339 |
| 1953 | — 80,97,895 |
| 1961 | — 1,00,00,000 |

(ஏறக்குறைய)

இலங்கையில் தலைக்கு 1·6 ஏக்கர் நிலம் இருக்கின்றது. இதில் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலம் சுமார் 0·67 ஏக்கர். இப்போது பயிரிடப்பட்ட நிலம் தலைக்கு 0·35 ஏக்கர் நிலமே இருக்கின்றது. இந்நூற்ருண்டின் இறுதியில் ஏற்படக்கூடிய நிலைமையை எவ்வாறு சமாளிக்கமுடியுமோ தெரியவில்லை.

இலங்கை மக்களுக்குத் தேவைப்படும் உணவில் சுமார் அரைப் பங்கு இப்பொழுது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. அண்மைக் காலத்தில் உணவு உற்பத்தியில் கூட சுயதேவையைப் பூர்த்திசெய்யக் கூடிய நிலையில் இலங்கை இல்லை என்றே கூறலாம்.

### எவ்வாறு சமாளிப்பது?

பயிர்ச்செய்கைக்குப் போதிய நிலமிருக்கும் நாடுகளை சனப்பெருக்கம் பெருமளவுக்குப் பாதிக்கமாட்டாது. சனச்செறிவு அதிகமாகவும், பயிர்ச்செய்கைப் பெருக்கத்திற்குப் போதிய நிலமில்லாத நாடுகளும் பெருங்கஷ்டங்களுக்கு இலக்காக வேண்டியேற்படப் போகின்றது. இந்நாடுகள் சனப்பெருக்கத்தை மட்டுப்படுத்துவதற்கு குடும்பக்கட்டுப்பாட்டு முறையை மேற்கொள்ள வேண்டியேற்படலாம். சனச்செறிவு அதிகமுள்ள நாடுகளிலிருந்து, சனச் செறிவு குறைவாக உள்ள நாடுகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்து குடியேறி வசிப்பதற்கு நாடுகளிடையே உள்ள தடைகள் தளர்த்தப்படுமாகில் நெருக்கடி நிலையை ஓரளவுக்குத் தணிக்கலாம். விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவாகப் பிற கிரகங்களுக்குப் போக்கு வரத்து செய்யக்கூடிய வசதிகள் ஏற்பட்டு, சில கிரகங்களில் மனிதன் வசிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகளும் இருக்குமானல் உலக மக்கள் பாடு அதிர்ஷ்டம்தான்!

அண்டாக்டிக் கண்டத்தின் சில பகுதிகளிலும், சகாராப் பாலைவனத்தின் சில பகுதிகளிலும் மக்கள் குடியேறுவது விரைவில் சாத்தியமாகிவிடும். அண்டாக்டிக் கண்டத்தில் சுமார் ஐந்து ஆண்டுகளாக பதினெரு நாடுகள் தேச ஆராய்ச்சி செய்துவருகின்றன. சகாரா பாலைவனத்தில் சில இடங்களில் தரையின் கீழ் நீரூற்றுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இஸ்ரேலில் கடல் நீரை நன்னீராக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்தும் முயற்சி நடைபெறுகின்றது. குறைந்த செலவில் கடல்நீரை நன்னீராக்குவதற்கு வழி கண்டுபிடிக்கப்படுமானல் உலகின் பாலைவனங்கள் எல்லாவற்றையும் சோலைவனங்களாக்க முடியுமல்லவா! சனப்பெருக்கத்தால் எழக் கூடிய நெருக்கடிக்கும் தீர்வு காண முடியுமல்லவா!

## டிமெல் கார்டிபுக்கு விஜயம்

லண்டன், ஜூன் 15

பிரிட்டனில் சுற்றுப் பிரயாணம் செய்யும் இலங்கை ஒலிபரப்பு அதிகாரி திரு. ரொனி டிமெல், இன்று கார்டிபுக்கு விஜயம் செய்தார்.

## பரீட்சையில் சித்தியடைந்த குருடர்கள்

நாகபுரி, ஜூன் 15

விதர்ப்பா செகண்டரி கல்வி போர்டார் நடத்திய எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் 7 அந்தக மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் இரு மாணவர்கள் சிறப்புடன் தேர்வு பெற்றுள்ளனர்.

இந்த மாணவர்கள் கூறுவதை, பரீட்சையில் எழுதுவதற்கு ஆட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பு வானெலியிலே பக்திப் பாடல்கள் பாடிய ஓர் அன்பர் வந்தார். பாட்டைக் கேட்டீர்களா? என்ருர். அவர் இனிமையாகப் பாடக் கூடியவர். கேட்க வாய்ப்பில்லை என்று வருந்திவிட்டு, உங்களுக்கு எவ்வளவு மாதத்துக்கு ஒரு முறை 'சான்ஸ்' கிடைக்கிறதென்றேன். ஆறு மாதங்களுக்கு ஒரு முறைதானென்ருர்.

அருமையாகப் பக்திப்பாடல் பாடக்கூடியவருக்கு வருஷத்துக்கு இருமுறைதான் வானெலியில், சந்தர்ப்பம் கிடைக்கிறது! கேட்டால் பணமில்லை என்றும், பலர் பாட முன்வந்திருப்பதாயும், எல்லாருக்கும் சான்ஸ் கொடுக்க வேண்டியுள்ளதென்றும் சமாதானம் சொல்லக் கூடும்.

இதைப்பற்றி சற்றே சிந்தித்ததும், யாழ்ப்பாணத்திலே ஒரு வானெலி நிலயத்தை ஏற்படுத்த வேண்டிய அவசரத்தையும் அவசியத்தையும் உணர்ந்தேன். இரண்டு நாட்களுக்கு முன்தான் ஒரு செய்தியும் இதுபற்றி வெளியாயிற்று. யாழ்ப்பாணத்தில் வானெலி நிலயத்தை அமைக்க முயற்சி நடப்பதாக அச்செய்தி கூறியது.

இது சீக்கிரம் கைகூட வேண்டும். கண்டிக்குப் பக்கத்திலே 'செங்கடகல' என்ற ரேடியோ நிலயம் ஏற்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் ஏன் ஏற்படுத்தக் கூடாது? இங்கு ஏராளமான கலைஞர்கள் உள்ளனர். அவர்கள் கொழும்பு சென்று வர அதிக சிரமமும் பணச் செலவும் ஏற்படுகின்றது. யாழ்ப்பாணத்திலேயே ஒரு நிலயத்தை அமைத்துவிட்டால், இந்தக் கஷ்டங்கள் நீங்குவதுடன், கலைகளும் கலைஞர்களும் வளரக்கூடும்.

"டப்பா சங்கீ"தத்தை இராப்பகலாகப் போட்டு, காலத்தை ஓட்டி, இலங்கையின் நற்பெயரைக் கெடுக்காமல், உயிருள்ள கலைஞர்களை ஆதரித்து, கலைகளை வளர்க்கலாம். இதனல் இலங்கைக்கும் நல்ல பெயர் ஏற்படும்.

* * *

இந்தியாவிலே சென்ற வாரம் ஆகாசவாணியின் வெள்ளித் திருவிழா மிக விசேஷமாக நடைபெற்றது. இந்தியாவில் ரேடியோ நிலயங்களும் பெட்டிகளும், எப்படி நாடெங்கும் பெருகியுள்ளதென்பது பற்றிப்பெருமையுடன் தெரிவித்தனர்.

இந்தியாவில் ரேடியோ நிலயம் அமைக்கு முன்பாகவே கொழும்பிலே இது ஏற்பட்டுவிட்டது. என்ருலும் செங்கடகலவைத் தவிர புதிய நிலயங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் ஒரு நிலயத்தை ஏற்படுத்தினல் இக்குறை தீருவதுடன், வடமாகாண வளர்ச்சி விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறதென்பதற்கு ஓர் அத்தாட்சியுமாகும்.

எப்படியும் முன்பின்னுக ஒரு வானெலி நிலயம் இங்கு ஏற்படத்தான் போகிறது. அப்படி யாழ்ப்பாணத்தில் ஒரு நிலயம் ஏற்பட்டால், கூடுமானவரை இசைத்தட்டுகளை விட்டு, உயிருள்ள கலைஞர்களுக்கு அதிக 'சான்ஸ்', கொடுக்கவேண்டுமென்று இப்போதேகூறிவைக்கிறேன்!

* * *

காங்கேசன்துறை துறைமுகத்தை விருத்திசெய்ய சில லட்ச ரூபாய்களை ஒதுக்க வேண்டுமென்று உள்நாட்டு அமைச்சர் கேட்டுள்ளதாக ஒரு செய்தியைப் பார்த்தேன்.

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண வீதிகளில் பாதசாரிகளின் கஷ்டம்

## வாகனப் போக்குவரத்து அதிகரிப்பதின் விளைவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண நகரில் பாதசாரிகள் நடப்பது கஷ்டமாகி விட்டது. மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும், குழாய்களைப் பதிப்பதற்காகச் சாலைகளில் பள்ளங்கள் தோண்டப்பட்டிருப்பதுமே இதற்குக் காரணம். வாடகைக் கார்கள், சொந்தக் கார்கள் ஆகியவற்றைச் செலுத்துபவர்கள் சாலைகளில் நடமாடும் பாதாசாரிகளையோ, சைக்கிளில் செல்பவர்களையோ கவனிக்காது 40 அல்லது 50 மைல் வேகத்தில் வாகனங்களைச் செலுத்துகிறார்கள். ஒருமுகப் போக்குவரத்து, வாகன சாரதிகளாலும், சைக்கிளில் செல்பவர்களாலும் புறக்கணிக்கப்படுகிறது. சந்திகளில் கூட ரஸ்தா விதிகள் மீறப்படுகின்றன. இவ்வித இடங்களில் காரில் அடிபட்டு உயிரிழக்காமல் இருக்கும் பொருட்டு சைக்கிளில் செல்பவர்கள் கீழே குதிக்கவேண்டியிருக்கிறது. வாகனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான தருணம் பொலிசாருக்கு இப்போது வந்துவிட்டது.

## சிமெந்தி தொழிற்சாலை வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை சிமெந்தித் தொழிற்சாலையில், பெறுமதியான பலபொருள்களைக் களத்வாடியதாக காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வி. இரத்தினசிங்கம், ஏ. கந்தையா, பி. கணேஷ், வி. விசுவநாதன், வி. முருகேசு ஆகியோர் மல்லாகம் உதவி நீதிபதி திரு. இளையதம்பி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி முதலாம், மூன்றும் எதிரிகளான வி. இரத்தினசிங்கம், பி. கணேஷ் ஆகியோரை தலா ரூ. 1000 பிணையிலும், மற்றைய மூன்று எதிரிகளையும் தலா ரூ. 600 பிணையிலும் செல்லுமாறு உத்தரவிட்டார்.

பொலிஸாரின் மறு விசாரணை முடியும்வரை நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார்.

# "அங்கோலாவில் போர்ச்சுக்கல் படைபலம் அதிகரிக்கிறது"

## பதவியிலிருந்து விலகும் கவர்னர் ஜெனரல் பெருமிதம்

லண்டன், ஜூன் 15

அங்கோலாவில் போர்த்துக்கலின் படைபலம் அதிகரிக்கப்பட்டிருப்பதாயும், நாளுக்கு நாள் அது வலுப்பெற்றுவருவதாயும் பதவியிலிருந்து விலகி லிஸ்பனுக்குச் செல்லும் அங்கோலா கவர்னர் ஜெனரல் கூறினார்.

போர்த்துக்கேய கடற்படை, ராணுவம், விமானப்படை ஆகியன, தேசிய வாதிகளை அடக்குமுகமாக வளர்ச்சி பெற்றுவருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், அங்கோலாவுக்குப் பயிற்சி ஒத்திகைக்காக பிரிட்டன் ராணுவ வீரர்களை அனுப்புவதனால் அதன் நோக்கம் பற்றி ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் மாறான கருத்துக்கள் ஏற்படுமென்றும், இதைச் சபையில் விவாதிக்க வேண்டுமென்றும் காமன்ஸில் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த கோரிக்கையைப் பாதுகாப்பு மந்திரி நிராகரித்துவிட்டார்.

## டாக்டர் ஞானலிங்கத் ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊக்குவித்துள்ளார் எனக்கூறினார்.

காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையின் ஊழியர்சங்கத் தலைவர் திரு. எஸ். ஐ. விஜயநாயகம் பேசுகையில், பரந்தன் கெமிக்கல் சங்கத்தாரின் எண்ணம் கைகூடும் எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

இத்தொழிற்சாலையில்கடமையாற்றும் டாக்டர் ஞானலிங்கத்தின் சேவையை ஒரு வருடத்துக்காவது அங்கு நீடிக்கச் செய்யவேண்டுமென்று கைத்தொழில் உள்நாட்டு மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் திறமையான நிர்வாக அதிகாரி ஒருவரை தொழிற்சாலையில் நியமிக்கவேண்டுமென்னும் தீர்மானமும் வேறு பல தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

திறைசேரி நிர்வாகம்

## 'குறிப்பு எழுத தாமதம் வேண்டாம் உடனடியாக உத்தரவிடவும்'

கொழும்பு, வியாழன்

திறைசேரி நிர்வாக விஷயமாக இனி புதிய முறையைக் கையாளவேண்டுமென்று, ஸ்தாபன நிர்வாக முறை டைரக்டர் ஒரு யோசனை கூறியுள்ளார்.

இதுவரை எந்த விஷயமாகவும் அதிகாரிகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் முதலில் குறிப்புகள் எழுதவேண்டுமென்பது முறை. இனி இவ்வித அவசியமற்ற குறிப்புகள் எழுதத் தேவையில்லை என்றும், அதிகாரிகளே அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகள்பற்றி தங்களுக்குள் கலந்து யோசனை செய்து உடனுக்குடன் நேரடியாக உத்தரவுகள் பிறப்பிக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## துறைமுக கார்கோ கார்ப்பரேஷன்

### 'இரவல்' அதிகாரிகளுக்கு அதிகச் சம்பளம்

கொழும்பு, வியாழன்

துறைமுக கார்கோ கார்ப்பரேஷனுக்கு அரசாங்கம் 5 அதிகாரிகளை இரவலாகக் கொடுத்திருந்தது. அந்த அதிகாரிகளை அதிக சம்பளத்தில் அக்கார்ப்பரேஷனேவேலைக்கு அமர்த்திக் கொள்ள முன்வந்திருக்கிறதாகத் தெரிகிறது.

## பூமிக்கு தகவல் அனுப்பும் கருவி

லாஸ் ஏஞ்சல்ஸ், ஜூன் 13

சூரியமண்டலத்துக் கருகில் சென்று, பூமிக்குத் தகவல் அனுப்பும் உபகரணம் பற்றி விஞ்ஞானி ஒருவர் இங்கு விளக்கிக் காட்டினார். உபகரணத்தின் மாதிரிப்படம் ஒன்றையும் அவர் சமர்ப்பித்தார்.

செனட்

# ராஜரத்னா உண்ணாவிரத செய்திகள் ஏன் பிரசுரிக்கப்படவில்லை?

## செனட்டர் கூரேக்கு நீதிமந்திரி பதில்

கொழும்பு, வியாழன்

திரு. கே. எம். பி. ராஜரத்னாவின் உண்ணாவிரதம் பற்றிய செய்திகளையும் புகைப்படங்களையும் பத்திரிகையில் தகுதி பெற்ற அதிகாரியால் அனுமதிக்கப்பட்டாலன்றி பிரசுரிக்கக் கூடதென்பது முறையானதா என்றும் இதுசம்பந்தமாக கூட்டங்களை நடத்த அனுமதி மறுக்கப்பட்டது உண்மையா என்றும் நேற்று நடைபெற்ற செனட் சபைக் கூட்டத்தில் செனட்டர் எட்மன்ட் கூரே செனட் சபைத் தலைவரிடம் கேட்டார்.

செனட்டர் கூரே மேலும் குறிப்பிட்டதாவது:-

கோர்ட் தீர்ப்பையே மாற்ற 'இந்த மனிதர்' எடுத்திருக்கும் நடவடிக்கைக்கு நான் சிறிதும் அனுதாபப்படவில்லை. ஆனால் அவர் தமது கருத்தைப் பத்திரிக்கைகளுக்குத் தெரிவிக்கவோ அல்லது அவரதுஆதரவாளர்கள் தமது கருத்துக்களை அவருக்காக வெளியிடவோ உரிமையுண்டு.

இவ்வித கருத்துக்களை வெளியிட அனுமதிப்பதால் அரசாங்கம் எதையும் இழந்துவிடாது. இந்த சூழ்நிலையை அரசாங்கமே உருவாக்கியுள்ளது.

அவசரகாலச்சட்டம்மொழிப் பிரச்சினை சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்டது. எனவே இவரின் உண்ணாவிரத நடவடிக்கைக்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவது முறையானதல்ல."

இதற்குப் பதிலளிக்கையில் நீதி மந்திரி திரு. சாம். பி. ஸி. பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

"திரு. ராஜரத்னாவின் அறிக்கைகள் தணிக்கை செய்த பின்னர் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டன.

அவர் அந்த அறிக்கைகளில் தமது வழக்கைப்பற்றி எதுவும் கூறாது மொழிப் பிரச்சினை சம்பந்தமாகவே அதிகம் கூறியுள்ளார். எனவே அவற்றைப் பிரசுரிப்பது புத்திசாலித்தனமானதல்ல என்று எண்ணியே அவை பிரசுரிக்கப்படாது தடுக்கப்பட்டன."

செனட்டர் கூரே: புகைப்படங்களைப் பிரசுரிப்பதை ஏன் தடை செய்யவேண்டும்? இதனால் ஏதும் தீங்கு ஏற்படுமா?

நீதி மந்திரி: இவ்விதம் பிரசுரிப்பதால் என்ன நன்மை ஏற்படும்?

## நேருவுக்கு அநாமதேய கடிதங்கள் எழுதியவர்

கான்பூர், ஜூன் 14

பிரதமர் நேருவைத் தாக்கப் போவதாக அநாமதேயக் கடிதங்கள் எழுதியதாக, பிரேம்நாராயண குப்தா என்ற வாலிபர்மீது இன்று கான்பூர் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட சமயம், ஜூன் 23-ம் திகதியன்று விசாரணைக்கு நாள் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நடுநிலைமை நாடுகளின் அதிபர்கள் மகாநாடு

### பிரதமர் நேரு கலந்துகொள்வார்?

புதுடில்லி, ஜூன் 15

செப்டம்பர் மாதம் யுகோஸ்லேவியாவில் நடக்கவிருக்கும் நடுநிலைமை நாடுகளின் அதிபர்களது மகாநாட்டில் பிரதம மந்திரி நேரு கலந்துகொள்ளக் கூடும் என்று தெரியவருகிறது.

தற்போதுஹுலுபள்ளத்தாக்கில் ஓய்வு எடுத்துக்கொண்டிருப்பதால் அவர் திரும்பி வரும் வரை இதுசம்பந்தமாக உத்தியோக பூர்வ அறிக்கை எதுவும் வெளியிடப்பட மாட்டாது. எனினும், இம்மகாநாட்டுக்கு முதலில் யோசனைகளை வெளியிட்ட டிட்டோ, நாஸர், சுகர்னோ ஆகியவர்களுடன் நேரு தொடர்புகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகாநாட்டு ஆயத்தக்கமிட்டி வெளியிட்ட அறிக்கை, மகாநாட்டுக்கு அழைப்பு அனுப்பப்படுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றி ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கூறுகிறது. ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் மேற்கொண்டு ஆலோசனைகளைத் தொடர்ந்து அழைப்புகள் அனுப்பப்படும் என்று இப்போது தெரியவருகிறது.

## டாக்டர் சுகர்னோ

பீகிங், ஜூன் 15

இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்னோ, பெல்கிரேடுக்குச் செல்லும் பொருட்டு இன்று பீகிங்கிலிருந்து புறப்பட்டார்.

## ஷோம்பேக்கு மந்திரி பதவி

லியப்போல்ட்வில்லி, ஜூன் 15

கட்டாங்காஜனாதிபதி ஷோம்பேக்கு காங்கோ மத்திய அரசாங்கத்தில் மந்திரி பதவி அளிக்கப்படுமென அரசாங்க வட்டாரங்கள் அறிவிக்கின்றன. பிரஸ்ஸல்ஸிலும் மிபானிலும் உள்ள கட்டாங்கா பிரதிநிதிகளுடன் காங்கோ மத்திய அரசாங்க வெளிவிவகார மந்திரி பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டுத் திரும்பியபின் இத்தகவல் வெளியாகியது.

## பாரிஸில் வலதுசாரிகள் விடுகள் சோதனை

பாரிஸ், ஜூன் 15

இன்று பாரிஸில் வலதுசாரி தீவிரவாதிகளின் வீடுகளை 200 பொலிசார் சோதனையிட்டனர். கிராமப்புறங்களிலும் இவ்வித சோதனைகள் நடைபெற்றன. எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

## கியூபா ஆட்சேபம்

ஹவானா, ஜூன் 15

நேற்று ஹவானாமீது அமெரிக்க ஜெட்விமானம் ஒன்று பெருத்த சப்தத்துடன் பறந்ததாயும் தமது நாட்டு எல்லைக்குள் அத்துமீறிப் பறந்ததற்காக கியூபா அரசாங்கம் அமெரிக்கவுக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளதாயும் அறிவிக்கப்பட்டது.

## ஸ்ரீ சத்தியமூர்த்தி, ஸ்ரீ காமராஜ் சிலைகள்

சென்னை, ஜூன் 15

சென்னை மாஜி மேயர் காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி, முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் ஆகியவர்களின் சிலைகளை ரிப்பன் கட்டிடத்தில் வைப்பதற்குச் சென்னை கார்ப்பரேஷனுக்கு சர்க்கார் ரூபாய் 25,000 அனுமதித்துள்ளது.

# கோவா பற்றி இந்திய அரசாங்கத்தின் கொள்கை

## ஸ்ரீமதி அருணாஆசப்அலி குறைபாடு

புதுடில்லி, ஜூன் 15

கோவா தேசிய பிரஜைகள் கமிட்டியின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் இந்தியாவிலுள்ள போர்த்துக்கல் திட்டுக்களை இவ்வாண்டு விடுதலை பெற்றுக் கொடுக்க வேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் கோவா கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கோவா பற்றிய கொள்கையை, கூட்டத்தில் பேசிய ஸ்ரீமதி அருணா ஆசப் அலி குறை கூறினார். கடந்த 15 வருடங்களாக இக்கொள்கையினால் தான் கோவா, டாமன், டையூ ஆகிய பகுதிகள் இன்னும் விடுபடாமலிருக்கின்றதென அவர் குறிப்பிட்டார்.

## மக்கள் சீனுபற்றி பேசுவார்

டோக்கியோ, ஜூன் 12

ஜப்பானிய பிரதமர் திரு. இகாடா, தாம் அடுத்தவாரம் வாஷிங்டனில் ஜனாதிபதி கென்னடியைச் சந்திக்கும் போது மக்கள் சீனா பற்றியும் பேசப்போவதாய்க் குறிப்பிட்டார்.

## கம்யூனிஸ்ட் அபாயம் பற்றி அதிபர் கடிதம்

வாஷிங்டன், ஜூன் 15

தென் வியட்னாம் அதிபர் போடின் டயம், தம் நாட்டில் கம்யூனிஸ்ட் அபாயம் பற்றி ஜனாதிபதி கென்னடிக்கு ஒரு செய்தியை அனுப்பிவைத்திருக்கிறார்.

## காங்கோ பார்லிமெண்ட்

லியப்போல்ட்வில்லி, ஜூன் 15

கிழக்குக் காங்கோவின் லுமும்பா ஆதரவுப்படையைச் சேர்ந்த பிரதிநிதிகள் காங்கோ தேசிய கூட்டத்தில் கலந்துகொள்ளச் சம்மதம் தெரிவித்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அந்தோனி கிஸங்காவின் தலைமையில் இருக்கும் லுமும்பா ஆதரவுப்படை லியப்போல்ட் வில்லியில் இருந்து காங்கோலியப் பட்டாளம் எடுக்கப்பட வேண்டும் என்றும் பார்லிமெண்ட் அங்கத்தவரைப் பாதுகாப்பதற்கு பத்தாயிரம் ஐ. நா. படை அங்கு இருக்கவேண்டும் என்றும் கோரியுள்ளதாகத் தெரியவருகின்றது.



# மங்கையர் உலகம்



# பெண்களுக்குப் பெரிதும் உதவும் தையற்கலை

**ஓய்வு நேரத்தில் தையற்கலையில் ஈடுபடுவது பெண்களுக்கு உபயோகமானதொரு பொழுதுபோக்கு. பெண்மணிகள் அனைவரும் தையற்கலையிற் பயிற்சி பெறவேண்டுமெனத் 'திருமகள்' இக்கட்டுரையிற் கூறுகின்றார்.**

எவ்வளவுதான் படித்துப் பட்டம் பெற்றாலும் இக்காலப் பெண்களுக்குத் தையற்கலையில் நல்ல அறிவு இருக்க வேண்டியது அவசியமாகிவிட்டது.

போதிய பணவசதி இருந்தாலும் தாங்களே தங்கள் தையல் வேலைகளைச் செய்து கொள்வதில் தான் எவ்வளவுமகிழ்ச்சி. அதுமட்டுமன்றி அதில்பெருமை உண்டு. இன்பமும் உண்டு.

பெண்களுக்கு இயற்கையாகவே தையற்கலையில் ஆர்வம் ஏற்படுகின்றது. இந்த ஆர்வத்தை நன்கு பயன் படுத்துவது ஒவ்வொரு பெண்ணினதும் கடமையாகும். தனது வேலையைத்தாமே பழகியிருத்தல் நல்லதல்லவா? பிறருக்குச் சேவைசெய்யவேண்டிய பெண்கள் இத்துறையிலும் சேவை செய்யலாமல்லவா? இன்றும் பல பெண்கள் தம் தையல் வேலைகளுக்குப் பிறரையே எதிர்பார்க்கிறார்கள். இது விரும்பத்தக்கதல்ல.

தையற்கலை தெரியாதபெண்கள் படும் சிரமத்தை நாங்கள் பார்க்கின்றோம். சில வேளைகளில் அவர்களது கணவர்களே அவர்களைக் கண்டிப்பார்கள். "தையற்கூலி கொடுப்பதற்கு என்னால் உழைக்க முடியாதப்பா" என்று சில கணவர்மார் சொல்லுவதுண்டு. பெண்ணுக்கு இது கவலையைக் கொடுப்பதாகும்.

'துணி அளவாகக் கொடுத்தும் தையற்காரர் சட்டையைச் சிறிதாக்கிவிட்டார். ரவிக்கையின் அளவைப் பிழையாக வெட்டிவிட்டார். அதனால் போடவே முடியவில்லையே வீண் செலவாகப் போச்சே' என்றெல்லாம் சில பெண்கள் கவலைப்பட்டுக்கொள்வார்கள்.

அன்றொருநாள் சகோதரி ஒருவரைச்சந்தித்தேன். ஏதோ பறிகொடுத்தவர் போல அவர் காணப்பட்டார். விசாரித்த போது தனது கவலையைக் கூறினார். சோம்பேறித்தனத்தால் தையல் வேலைகளைப் பழகாமல் இருந்துவிட்டாளாம். அதன் பலன் குடும்பப்பெண்ணாகிய பிற்பாடுதான் நன்றாகத் தெரிகிறது என்றார் அவர். சிறுவயதில் அவளின் தையல் வேலைகளை மூத்தசகோதரிகள் கவனித்து வந்தார்கள். அவர்களும் இதைத்தங்கை கற்றுக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி நினைக்கவில்லை. தங்கையும் தையற்கலையில் கவனம் செலுத்தவில்லை. இதனால்தான் அவள் இப்படிக் கவலைபபட வேண்டிவந்தது.

குடும்பப் பெண்களாகியபின் பெண்களுக்கு ஒருவர்வேலையை மற்றவர்கள் செய்ய நேரம் கிடையாது. குடும்பப் பெண்களுக்கு தம் வீட்டுக்கருமம் செய்யவே நேரம கிடைப்பதில்லையே. குடும்பப்பெண்கள் தமது வீட்டுத் தையல் வேலைகளை தமது சகோதரிகளிடமிருந்துஎதிர்பார்க்கமுடியாது.

ஒவ்வொரு பெண்ணும் இளம் பிராயத்திலேயே தையற்கலையைத் தெரிந்து கொள்ளவேண்டும். பெண்களுக்குரிய அக்கலை கஷ்டமானதல்ல. அதை விருத்தி செய்வதற்கு முயற்சி வேண்டும். எனவே, இளம் பிராயத்திலேயே பெண்கள் அதைப்பழகிவிடவேண்டும்.

வீட்டுப் பொருளாதாரவிருத்திக்குப் பெண்கள்எத்தனையோ வகைகளில் உதவமுடியும். வீட்டிலுள்ள தையல்வேலைகளைத் தாமே செய்து கொண்டு வந்தால் அதுவே அதிக பணச் செலவைக்குறைத்துவிடும். அத்தோடு நுட்பமான தையல் வேலைகளிற் பயிற்சிபெற்றால் பணம் சம்பாதிக்கவும் அது வாய்ப்பு அளிக்கும். ஓய்வு நேரங்களில் மேசை விரிப்பு, மெத்தையுறை, தலையணையுறை போன்ற உபயோகமான பொருள்களைச் செய்து விற்கலாம்.

தையற்கலையினால் பெண்கள் பெருமையும் மகிழ்ச்சியும் அடையலாம். காலத்தின் போக்கிற்கேற்பத் தனது உடைகளைத்தைத்துத் தன்னை அழகு படுத்திக் கொள்ளலாம். தமது 'ஜாக்கெட்'டுகளை அளவு பிரமாணங்களுக்கு ஏற்பச் சரிவரத் தைக்கவேண்டுமானால் அதனை அணியும் பெண் தைத்தால்தான் அவை நன்கு அமையும். இதன் உண்மையைத் தையல் வேலை செய்யும் பெண்கள் யாவரும் அறிவர்.

தனது உடுப்புக்களை அழகாகத் தைப்பதுடன் குழந்தைகளுக்கும் அழகான சட்டைகளைத் தைத்து அணிந்து அழகு பார்க்கலாம். அதிலே ஒருதனி இன்பம் உண்டு. தையற்கலை தெரிந்துவிட்டால் தமக்குவிருப்பமான முறையிலும், பிள்ளைகளுக்கு விருப்பமான மாதிரியாகவும் சட்டைகள் தைத்து அணிந்து ஆனந்தம் அடையலாம். உடையலங்காரமல்லவா பிறரதுகண்காணிப்பையும் கவனத்தையும் கவருவது. பிள்ளைகளின் அழகிய சட்டைகள் தாயின் தையல் வல்லமையைக் காட்டுமல்லவா! இது தாய்க்குப் பெருமையும் மகிழ்ச்சியும் தானே.

ஒருபெண் தனது வீட்டை அழகுபடுத்த உதவும் கலைகளில் தையற்கலையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

தையற்கலையின் உதவியால் அழகுசெய்யப்படும் இல்லமானது கண்ணுக்குக் கவர்ச்சியையும் உளத்துக்கு மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

நாங்கள் உருவாக்கும் பொருள்கள் நமக்குப் பெருமையளிக்கும். அத்துடன் ஓய்வு நேரத்தைக்கழிக்கவும் தையற்கலை உதவுகிறது.

# வாசனைத் திரவியங்கள்

ஒருவரின் உடல், மனவளர்ச்சிக்கு முதல் தேவை ஆரோக்கியமான, அழகான சருமம். தக்க பொருள்களைத் தேர்ந்தெடுத்து உபயோகித்தால் சருமத்தில் முன்கூட்டியே சுருக்குகள் ஏற்படுவதைத் தடுத்துவிடலாம்.

மனம், சுவர்க்கத்தையும் நரகமாக்கிவிடும். நரகத்தையும் சுவர்க்கமாக்கிவிடும். சருமம் மனத்தைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணடி என்பது முதுமொழி. சருமஆரோக்கியத்துக்கு மனத்திருப்தியும் அமைதியும் இன்றியமையாதவை.

இந்நாளில், அழகுச் சாதனங்களை ஆண்களும் பெண்களும் உபயோகிப்பது நாகரிகமாகிவிட்டது. முன்காலத்திலிருந்தே பெண்கள், வாசனைத் தைலங்கள், சாயங்கள் பூசித் தங்களைச் சிங்காரித்துக் கொண்டார்கள். 'ஒரு பெண் அழகாகத் தோன்றினால் அவள் நன்றாக இருப்பதாக நினைக்கிறாள். நன்றாக நினைப்பதாக நினைத்தால், நன்கு வேலை செய்கிறாள். வாசனைத் திரவியங்கள் உள்ளத்துக்குக் குதூகலமளிக்கிறது" என்று கூறுகிறார்கள்.

## அதிகாரிகளின் மனைவிகளுக்கு

அதிகாரிகளுடைய மனைவிகள், தங்களுக்கு கணவர்களின் சம்பளத்தில்தான் பங்குண்டு. கடமைகளில் பங்கில்லையெனக் கருதக் கூடாதென்பதற்கு இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளின் மனைவிகள் தக்க உதாரணமாவார்கள். ஆங்கில அதிகாரிகள் இந்நாட்டிலிருக்கும்போது அவர்களுடைய மனைவிகள் அவர்களுடைய வருமானத்திலும், கௌரவத்திலும் பங்கு. கொள்வதோடு இவர்கள் செய்தே தீரவேண்டுமென்ற கட்டுப்பாடில்லாத பல தொண்டுகளையும் செய்துள்ளார்கள்.

ராஜ்யப் பிரதிநிதிகளின் மனைவிகளும், கவர்னர்களின் மனைவிகளும் கூட இவ்வாறு செய்துள்ளார்கள். இந்தச் சீமாட்டிகளெல்லாம் அவர்கள் மாளிகையிலேயே உல்லாசமாக இருந்து கொண்டு ஆடம்பர வாழ்க்கையிலீடுபட்டிருந்தால் யார்தான் இவர்களைக் குறைகூற முடியும்?

ஒவ்வொரு பிரிட்டிஷ் அதிகாரியின் மனைவியும் தன் கணவன் அதிகார முறையில் செய்யும் வேலையோடு இணைந்த தொண்டுகளை மக்களுக்கு ஓயாமல் செய்து கொண்டிருந்தார்கள். சம்பளம் பெற்றுக் கணவர்கள் செய்துவந்த வேலைக்குச் சம்பளமில்லாமலே அவர்கள் மனைவிகள் செய்துவந்த தொண்டு சமானமாகும்.

— ராஜாஜி

# காய்கறி, பூச்செடி வளர்க்க பெண்களுக்குப் பயிற்சி

**காய்கறி—பழம் பயிரிடுதல், பூச்செடிகளை வளர்த்தல், தோட்டங்களைப் பராமரித்தல் முதலியவற்றில் பெண்கள் தேர்ச்சி பெற இந்நாட்களில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவ்வித பயிற்சி அளிக்கும் பள்ளிக்கூடம் ஒன்றைப்பற்றி இக்கட்டுரையில் அறியலாம்.**

இயற்கையில் தமக்கிருந்த ஈடுபாடு, இயற்கை அழகை அனைவரும் கண்டு இன்புற வேண்டுமென்ற எண்ணம் ஆகியவற்றால் சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன்பு ஒருவர் பெண்களுக்கெனத் தோட்டக்கலைப் பள்ளிக்கூடம் ஒன்றை ஹாலந்து நாட்டில் அமைத்தார். அவரது விடாமுயற்சி, துணிவு, முதலியவையே அந்தப் பள்ளிக்கூடம் அமையக் காரணமாயிருந்தன.

அது ஒரு தனியார் நிறுவனமாகவே அமைந்திருந்தது. அதற்குவேண்டிய நிதி முதலிய பொறுப்புக்களை அதை ஆரம்பித்தவர்களே ஏற்றுக்கொண்டனர். தமது வீட்டெல்லையில் தோட்டத்தை வளர்த்து மகிழ விரும்பிய பெண்களுக்கு பயிற்சியளிக்கும் நிலையமாகவே இருந்துவந்தது. மாணவர்களின் தொகை படிப்படியாக மிகுதியாகி அது ஒரு பெரிய நிலையமாக மாறியது.

தனியார் மட்டுமன்றி அரசாங்க விவசாயத்துறையினரும் அந்தப் பள்ளிக்கூடத்தில் அக்கறை காட்டத் தொடங்கினர். மாணவர்களுக்கு முழுப் பயிற்சி அளிப்பதற்கென தோட்டக்கலையின் நவீன உத்திகளெல்லாம் கற்பிக்கப்பெறுகின்றன.

### பயிற்சி வகுப்புகள்

1907-ம் ஆண்டில் அந்தப் பள்ளிக்கூடம் தொடங்கிய போது பயிற்சி வகுப்புகள் தான் மிகுதியாக இருந்தன. இப்போது எல்லா வகுப்புகளும் நடைபெறுகின்றன. நிலவியல், பொருளாதாரம், பூந்தோட்ட வளர்ப்பு முதலியவற்றில் பாடங் கற்பிக்கிறார்கள். காய்கறி—பழம் பயிரிடுதல், பூச்செடிகளை வளர்த்தல், பூந்தோட்டப் பயிர், தோட்டங்களைப் பராமரித்தல் முதலியவற்றில் மாணவர்கள் நல்ல தேர்ச்சி பெறவேண்டும். பூக்களை அழகாக அமைப்பதில் கலையுணர்ச்சி வெளிப்படும்.

பெண்களுக்கான அந்த உயர்தர தோட்டக்கலைப் பள்ளிக்கூடத்தில் மூன்றரை ஆண்டுகள் பயிலவேண்டும். இதில் ஐந்து மாதங்கள் நேரடிப் பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

### அறிவைப் பயன்படுத்தல்

தோட்டப் பயிர் நிறைந்த பரப்பை பாதுகாக்கும் பொறுப்பை மாணவர்களிடமே ஒப்படைத்திருக்கின்றார்கள்.

பயிற்சி முடிந்து பட்டம் பெற்றதும் மாணவர்கள் சமுகத்தின் நல்ல அங்கங்களாக விளங்கவேண்டும்.

விஞ்ஞான அறிவைச் செயல் முறையில் பயன்படுத்துவதற்கு பல ஆண்டுகளாக முயன்று தோட்டப் பயிர் வருவாய்க்கு உதவும் வகையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடம் சமுகத்தில் ஒரு நிரந்தர இடம் பெற்றிருக்கிறது. அதில் படித்து முடித்தவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சி, தகவல் அறிவிப்பு முதலியவற்றில் துணைபுரிவது மட்டுமின்றி தமது அறிவைப் பலவிதங்களிலும பயன்படுத்துகின்றார்கள்.

## ரயில் நேரம்

| யாழ்ப்பாணம் | | கோட்டை |
|---|---|---|
| காலை 7-30 | — | மாலை 8-00 |
| *பி. ப. 2-20 | — | இரவு 10-05 |
| மாலை 5-45 | — | காலை 5-15 |
| **கோட்டை** | | **யாழ்ப்பாணம்** |
| *காலை 6-00 | — | பி. ப. 1-30 |
| காலை 6-45 | — | மாலை 5-55 |
| இரவு 8-35 | — | காலை 6-55 |

அழைக்கின்றோம்

எங்கள் சாறி மாளிகைக்கு

பங்குபற்றுங்கள்

எங்கள் இருப்பு எடுக்கும்

**விற்பனையில்**

**12-6-61 — 30-6-61**

எல்லாப் பிடவைகளின் விலைகளிலும்
எதிர்பாரா இறக்கம்

மறுமுறை பெறமுடியாத
காஞ்சிபுரம், மணிப்புரி, காஷ்மீர், டக்கா
கைத்தறிச் சேலைகளை
இத்தருணத்தில் சகாய விலையில்
பெற்றுக்கொள்ளத் தவறுதீர்கள்.

பலவகையான "றெடிமேட்ஸ்", பப்பிளின்ஸ், சீத்தைகள், சோளிகள், லோன்ஸ், நைலோன்ஸ், சூட்டிங்ஸ், ஷேட்டிங்ஸ் மற்றும் பல ஏராளமாக விற்பனைக்குண்டு.

(கொள்வனவில் 5 வீத கழிவு)

**டயரும்ஸ்**

54 - 60, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# காங்கேசன்துறை வீதியிலுள்ள சில கட்டடங்கள்

## மாநகரசபைக் கூட்டத்திற்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

"சட்டத்துக்குமுரணை முறையில் யாழ்ப்பாணம் காங்கேசன் துறைவீதியில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் சொந்தக்காரர் களைத் தண்டிக்க வேண்டும். அல்லது அக்கட்டிடங்களை இடிப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்னும் ஓர் பிரேரணையை மாநகர சபை அங்கத்தவர் திரு. ஏ. ஜி. இராஜசூரியர் இன்று நடைபெறும் மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டுவருவார்.

திரு. இராஜசூரியர் கொண்டு வர விருக்கும் பிரேரணை வருமாறு:-

"வீடமைப்பு நகர திருத்தக் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரணை வகையில் பல கட்டிடங்கள் காங்கேசன் துறை வீதியில் கட்டப்பட்டுள்ளன. எனவே, இச்சட்டத்திற்கு முரணை வகையில் இனிமேல் கட்டிடங்கள் கட்டாதவாறு தடை செய்வதற்கும், ஏற்கனவே சட்டத்திற்கு முரணை வகையில் கட்டிடங்கள் கட்டியவர்களைத் தண்டிப்பதற்கு அல்லது அவர்களது கட்டிடங்களை இடிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது"

## "பாடசாலை விஸ்தரிப்புத்திட்டம்"

### அடுத்த வருடத்தில் கிடையாதாம்

அளுத்கமை, வியாழன்

"அடுத்த நிதி வருஷத்தில் புதிய பள்ளிக் கூடங்களைக் கட்டவோ விஸ்தரிப்புத் திட்டங்களை மேற்கொள்ளவோ முடியாது" என்று அல்கம்பாரா மகா வித்தியாலய பெற்ருேர் ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்பட்ட விருந்துபசாரக்கூட்டத்தில் கல்வி அமைச்சர் ஜனப் பதியுதீன் மாமூத் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:—

தேசிய கல்வித்திட்டத்தை சரியாக நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு பல மாற்றங்கள் தேவை. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு விரிவான வேலைத்திட்டம் அவசியமாகும். கொழும்பு சாகிராக் கல்லூரி அதிபர் செனட்டர் ஏ. எம். ஏ. அஸீஸ் இவ்விருந்து பசார வைபவத்தில் கலந்து கொண்டு பேசினர்.

## ஊர்காவற்றுறையில் அர்ச். அந்தோனியார் திருநாள்

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் திருநாள் சென்ற செவ்வாய்க்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கடந்த ஒன்பது நாட்களாக நடைபெற்ற வருடாந்த திருநாட்கள் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பெரிய பாடற்பூசையுடன் முற்றுப்பெற்றது. அன்றுமாலை அர்ச். அந்தோனியார் திருவுருவ சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது.

## அலமாரியிலிருந்த பணம் அபேஸ்!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரன் சுவாம்பிள்ளை என்பவர் தனது வீட்டிலுள்ள அலமாரியில் வைத்திருந்த 3100 ரூபாய் களவாடப்பட்டுவிட்டதாக யாழ்ப்பாணம் பொலிசில் புகார் செய்துள்ளார்.

சந்தேகத்தின்பேரில் அவரின் வேலையாள் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிசார் புலன்விசாரணைசெய்கின்றனர்

## 5000 தொன் சீனி

### இவ்வருட உற்பத்தி

கொழும்பு. வியாழன்

கல்லோயாப் பள்ளத்தாக்கில் இம்முறை சுமார் 50,000 தொன் கரும்பு வெட்டப்படும். செப்டம்பர் மாதவாக்கில் சீனித் தொழிற்சாலை 5,000 தொன் சீனியை உற்பத்தி செய்யும். இது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு கிடைக்கும்.

2,000 ஏக்கரில் இப்போது கரும்பு வெட்டும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மழை வருவதற்கு முன் இராணுவத் தொண்டர், படைவீரர் 1800 பேர் இப்பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

## சாரணர் இயக்க விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட சாரணர் இயக்க விழா இம் மாதம் 27ந் திகதி யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று காலை 9 மணிக்கு முகாம்களுக்கு வந்து சேரும் சாரணர் கூட்டம் பலவிதவிளையாட்டுகள், களியாட்ட நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் மாலைவரை ஈடுபட்டிருக்கும்.

## கலைச்சொல் அகராதி

### பாரதமொழியில் தயாராகிறது

புதுடில்லி, ஜூன் 15

பாரதத்தின் சகல மொழிகளிலும் உள்ள கலைச் சொற்களைக் கொண்ட அகராதி யொன்று இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் இந்திய அரசாங்கக் கல்விப் பகுதியில் வெளியிடப்படவிருக்கிறது.

புதிய கலைச்சொல் அகராதியில் மூன்று இலட்சம் கலைச் சொற்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனவாம்.

விஞ்ஞானம், தொழில் நுட்பம் சம்பந்தமாக வெளிநாட்டு புத்தகங்களை குறைந்த விலையில் வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இந்த புத்தகங்களின் விலைக் குறைப்பால் பாரத நாட்டுப் புத்தகங்களின் விற்பனை பாதிக்கப்படமாட்டாதென்றும் கருதப்படுகிறது.

## காஷ்மீரில் ராஜஸ்தான் விவசாயிகள்

ஜம்மு, ஜூன் 15

ராஜஸ்தானைச் சேர்ந்த 450 விவசாயிகள் காஷ்மீரில் விவசாய முறைகளை அறிந்து கொள்வதற்கும், சமுதாயநிலத் திட்டங்களைப் பார்ப்பதற்குமாக காஷ்மீர் சென்றுள்ளனர்.

## டீன்றஸ்க் – ஹியூம் பிரபு சந்திப்பு

வாஷிங்டன், ஜூன் 15

பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம் பிரபுவும், அமெரிக்க ராஜாங்க மந்திரி டீன் றஸ்க்கும் நேற்று சந்தித்து லாவோஸ் பிரச்னை, அணு ஆயுத பரிசோதனைத் தடை, ஜேர்மன் பிரச்னை ஆகியவைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர்.

## மெக்கா சென்ற சிறுவர்கள் திரும்பினர்

டாக்கா, ஜூன் 15

மெக்காவுக்குச் சென்றிருந்த கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த ஆயிரத்துநூறு சிறுவர்கள் நேற்று சிட்டகாங் வந்து சேர்ந்தனர்.

## ஹாக்கி

நியூஸிலந்தில் இந்தியஹாக்கி கோஷ்டிக்கும், ஸ்தல ஹாக்கி கோஷ்டி ஒன்றுக்குமிடையே நடைபெற்ற ஒரு விளையாட்டுப் போட்டியில் 4—1 கோல்களால் இந்தியா வென்றது.

## காஷ்மீரில் 40,000 உல்லாசப்பிரயாணிகள்

புதுடில்லி, ஜூன் 14

சென்ற மாதக் கடைசிவரை காஷ்மீருக்கு 40,000 உல்லாசப் பிரயாணிகள் சென்றிருக்கிருர்கள் என்றும், இதில் 7000 பேர் வெளிநாட்டினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

வெள்ளி 16-6-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 7-45 என். சொர்ணலிங்கம் - பக்திப் பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 என். எஸ். சண்முகநாதன் - நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 "ஞான - அஞ்சலி", 7-30 புத்தகவிமர்சனம், 7-45 ஆகாசவாணி அஞ்சல், 8-45 இஸ்லாமிய கீதங்கள், 10-00 நேயர்விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 வி. என். நாகராஜன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 2-10 வி. என். நாகராஜன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராமிய நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ஷேய்க் சின்ன மௌலா சாகிப் - நாகஸ்வரம், 9-15 பலகணி, 9-30 மெல்லிசை மெட்டுகள், 9-45 இசைமாலை.

## ஊர்காவற்றுறை சிவாலய உற்சவம்

ஊர்காவற்றுறை, வியாழன்

லைடன்தீவில் உள்ள சிறப்புமிக்க ஒரேயொரு சிவாலயமான ஊர்காவற்றுறை சிவன் கோவில் வருடாந்த உற்சவங்கள் சென்ற திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

இம்மாதம் 20ம்தேதி நடைபெறும் தேர்த்திருவிழாவை அடுத்து விசேட அபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

## கூட்டு ஸ்தாபனங்களின் ஊழியர் சம்பள விகிதம்

### மறு பரிசீலனை செய்ய முடிவு

கொழும்பு, வியாழன்

அரசாங்க ஆதரவுள்ள கூட்டு ஸ்தாபனங்களில் உள்ள சகல ஊழியர்களினதும் சம்பளம், வேலை நிலைமை ஆகியவைபற்றி மறு பரிசீலனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிலுள்ள ஊழியர்களின் சம்பள விகிதம், சேவை நிலைமை ஆகியவைகளை ஒரு தரப்படுத்தவும் அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களின் சம்பள விகித, சேவை நிலைமை ஆகியவைகளின் தரத்துக்கு கூட்டு ஸ்தாபனங்களின் ஊழியர்களின் சம்பள விகிதம் சேவை நிலைமை ஆகியவைகளைக் கொண்டு வரவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களை அரசாங்க கூட்டு ஸ்தாபனங்களுக்கு மாற்றுவதற்கு வசதியளிக்கும் சட்டத்தைத் தயாரிப்பதற்கு நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஏற்கனவே அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

கூட்டு ஸ்தாபனங்களின் ஊழியர்களின் சம்பள விகிதம் தற்சமயத்துக்கு கூட்டுஸ்தாபன சபைகளால் நிதிமந்திரியின் ஆலோசனையுடன் விதிக்கப்படுமெனத் தெரிய வருகிறது.

கூட்டு ஸ்தாபன ஊழியர்களின் சம்பள விகிதம் சேவை நிலைமை ஆகியவை இப்பொழுது ஒன்றுக்கொன்று வித்தியாசமாகவுள்ளன.

## வாசிகசாலைக்கு புதிய கட்டடம்

ஊர்காவற்றுறை, வியாழன்

சரவணை-நாரந்தனை ஸ்ரீகந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட ஸ்ரீ முருகன் வாசிகசாலைக்கு ஓர் நிரந்தரமான கட்டிடம் அமைக்கும் முயற்சிகள் அனேகமாகப் பூர்த்தியடைந்துவிட்டன.

## காங்கேசன்துறையில் அர்ச். அந்தோனியார் பெருநாள்

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன் துறை ஊறணியில் அர்ச். அந்தோனியார் திருநாள் வெகு பக்தி சிரத்தையோடு கொண்டாடப்பட்டது. அர்ச். அந்தோனியாரின் சொரூபம் புதுக்கூட்டிற் கடற்கரையோரமாகக் கொண்டு வரப்பட்டபோது கட்டளைக்குருவானவர் மக்களை ஆசீர்வதித்தார். சொரூபத்தின் சுற்றுலா வைபவம் பயபக்தியுடன் கோவிலுக்குத் திரும்பியதுடன் முடிவுற்றது. இத்திருநாள் பாடற்பூசையுடனும் ஆசீர்வாதத்துடனும் பூர்த்தியடைந்தது.

## தென் கொரியாவின் புதிய சட்டம்

சியோல், ஜூன் 15

சட்டவிரோதமாகப் பொருளைக்குவித்தவர்களைத் தண்டிக்கும் புதிய சட்டமொன்றை தென் கொரியாவின் புதிய இராணுவ அரசாங்கம் இயற்றியுள்ளது.

## மேற்கு ஈரியான் பிரச்சினை

### அமெரிக்கநிலை விளக்கம்

வாஷிங்டன், ஜூன் 15

மேற்கு ஈரியான் பிரச்சினை சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்பதே அமெரிக்காவின் விருப்பம் என்று அமெரிக்க ராஜாங்க காரியாலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேற்கு ஈரியானை இந்தோனேஷியாவுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி நெதர்லன்சை அமெரிக்கா வற்புறுத்தமாட்டாதென்றும் மேற்கு ஈரியான் சம்பந்தப்பட்டவரை அமெரிக்கா இந்தோனேஷியாவை ஆதரிப்பதாக இல்லையென்றும் இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ சமீபத்தில் தெரிவித்ததைக் குறிப்பிட்டே ராஜாங்க காரியாலய அதிகாரி மேற்கண்டவாறு கூறினர்.

மேற்கு ஈரியான் பிரச்சினை இந்தோனேஷியாவுக்கும் நெதர்லன்சுக்கும் பாதகமில்லாத முறையில் சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்பதுதான் அமெரிக்காவின் நிலை என்று அந்த அதிகாரி கூறினர்.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லைடன்" தயாரிப்பு

Leyden L.I.L

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

இன்றைய தேவை: சுதேசிப் பெருள் ஆதரவு!

அதற்கு வழி "லைடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது "லைடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

# இந்தியாவுக்கு உதவும் நாடுகளுக்கு உலக வங்கியின் மூன்று யோசனைகள்

புதுடில்லி, ஜூன் 14

மூன்ருவது திட்டத்துக்குத் தாங்கள் அளிக்கும் உதவியில் பெரும்பகுதியை எந்தத் திட்டத்துக்கும் இஷ்டப்படி பயன்படுத்திக்கொள்வதற்கான கடனுக ஒதுக்குமாறு இந்தியாவுக்கு உதவும் கோஷ்டி நாடுகளை உலக வங்கி வற்புறுத்தியிருப்பதாக நம்பப்படுகிறது.

திரும்பச் செலுத்துவதற்கு அதிகபட்சத் தவணை, குறைந்த வட்டி விகிதம் ஆகிய மற்றும் இரு யோசனைகளையும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நிபந்தனைகள் பூர்த்தியாளுல்தான் உறுதி கூறப்பட்ட 220 கோடி டாலர் உதவியை இந்தியா பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ள இயலும் என்று உலக வங்கி குறிப்பிட்டிருக்கிறது. உலக வங்கி யோசனைகளை அமெரிக்கா பூரணமாக ஆதரிப்பதாகத் தோன்றுகிறது. ஆனுல் இந்தியாவுக்கு உதவும் கோஷ்டியைச் சேர்ந்த இதர நாடுகளின் நிலை தெரியவில்லை. இஷ்டப்படி பயன்படுத்துவதற்கான தொகை வரம்பை மேற்கு ஜெர்மனிதான் முதலாவதாகத் தெரித்துள்ளது. உதவித் தொகையில் 25 சத விகிதத்தை அவ்வாறு பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மேற்கு ஜெர்மனி கூறுகிறது. இது மிகவும் குறைந்த வரம்பு என்று உலக வங்கி கருதுகிறது.

வட்டி விகிதங்கள், கடனைத் திரும்பத் தருவதற்கான தவணைக் காலம் ஆகியவை சம்பந்தப்பட்டவரை அமெரிக்காவுக்கு இணையாக இதர நாடுகளால் நடந்துகொள்ள இயலாது என்பது தெளிவு. அமெரிக்கா 0.5 சத விகித வட்டி விகிதத்தையும், 50 ஆண்டுத் தவணையையும் குறிப்பிட்டுள்ளது.

உலக வங்கியின் கருத்துக்களுக்கு இதர நாடுகள் எந்த அளவு இணங்கும் என்பது இனித்தான் தெரியவேண்டும்.

# கால்நடைகள் அட்டூழியம்; குடியேற்றக்காரர் முறையீடு

கிளிநொச்சி, வியாழன்

கட்டாக்காலி மாடுகள் நெல் வயல்களில் புகுந்து, பயிர்களுக்கு பலத்த சேதம் உண்டு பண்ணி வருவதாக கிளிநொச்சிப் பகுதியில் இருக்கும் குடியேற்றக்காரர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு முறையிட்டிருக்கிருர்கள்.

குடியேற்றக்காரர் சிலரிடம் சுமார் 150 ஆடு, மாடு, எருமைகள் அடங்கிய மந்தைக்கூட்டங்கள் இருக்கின்றன. மந்தைகள், கூட்டம்கூட்டமாக வேலிகளைப் பிய்த்துக்கொண்டு வயல்களில் புகுந்து, பயிர்களை மேய்வதோடு வேலிக்கு மேலாகப் பாய்ந்து சில சமயங்களில் வேலிகளையும் அழித்து வருகின்றன. மந்தைகளின் அட்டகாசத்தைத் தடுப்பதற்கு அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று விவசாயிகள் எதிர்பார்க்கிருர்கள்.

கல்மடுவில் இருக்கும் குடியேற்ற அதிகாரியின் திட்டத்தில் கட்டாக்காலி மாடுகள் வயல்களை அழிப்பதைத் தடுத்து வருகிருர்கள்.

# ஆங்கிலம் கட்டாய பாடமாக...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்ட முறையில் விளுத்தாள்கள் திருத்தப்படுவதில்லை. விளுத்தாள்களைத் திருத்துவதற்கென இன்னும் சிறந்தவர்களை நியமிக்க வேண்டும். அவர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்வதாலும் கலந்துரையாடுவதாலும் விளுத்தாள்களைத் திருத்தும் தரத்தை ஒரே தன்மையதாக்கலாம். பரீட்சை முடிவுகள் இரண்டு மாத காலத்துள் வெளியாக வேண்டும்.

மாணவரின் தேர்ச்சியை அவர்களின் பரீட்சைப் பேறுகளிலிருந்துதான் நிர்ணயிக்கலாம். எனவே பள்ளிக்கூட வேலைகள் பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்தே கணிக்கப்படுகிறது. பள்ளிக்கூடப் பரீட்சை மதிப்பதாளுல் பகிரங்கப் பரீட்சைகளுக்கு தயாராக்கும் இன்றைய முறையை அடியோடு நீக்கிக்கொள்ளலாம். பரீட்சைத் துறையில் ஆராய்ச்சி நடத்தப்படல் வேண்டும். புதுமுறைப் பரீட்சைகள், பரீட்சைகளைத் தரப்படுத்தல் என்பவை ஆராயப்படல் வேண்டும். இதற்காக ஆராய்ச்சிப் பகுதியொன்றை வித்தியாபகுதியில் அமைக்கலாம்.

### பள்ளிக்கூட வயது

பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் வயதை உயர்த்தவேண்டுமென இந்நாட்களில் அதிகமாக விவாதிக்கப்படுகின்றது! பள்ளிக்கூடத்தில் ஏற்கெனவே சேராத பாலர்களுக்கான பாலர் பள்ளிக்கூடங்களை நாடு முழுவதிலும் ஆங்காங்கு நிறுவிஞல் அனுகூலமாக இருக்கும். பாலர் பள்ளிக்கூடங்கள் இல்லாதவிடத்து பாலர்களின் மிக முக்கியமான இளமைப் பராயத்தில் அவர்களின் கல்வித் தேவையைக் கவனியாது விடல் தவறு. பள்ளிக்கூடத்துக்கு அனுமதிக்கப்படும் வயதிலிருந்து மூன்று மாதங்களைக் குறைத்தால் 4 வயதும் 6 மாதத்தில் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில்சேரக்கூடியதாகஇருக்கும்.

பள்ளிக்கூடத்திலிருந்து விலகுவதற்கு ஆகக் குறைந்த வயது இப்போது இருப்பதுபோல 14 ஆகவே இருக்கலாம்.

### வசதிக் கட்டணம்

வசதிக்கட்டணம் வசூலிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டதால்தான் பெரும்பாலும் பாடசாலைகள் தங்கள் பிள்ளைகளுக்குத் தகுந்த வசதிகள் அளிக்கின்றன. இந்த ஏற்பாடு இன்னும் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்பதே எங்கள் கருத்து. ஏதாவது காரணத்திற்காக வசதிக்கட்டணம் பெறுவது நிறுத்தப்பட்டால் அதற்கு ஈடு செய்யத் தக்க உதவி நிதி அளிக்கப்படல்வேண்டும்.

### உடற் குறைபாடு

உடற்குறைபாடுள்ள பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டும் நோக்கம் யாதெனில் அவர்களும் இச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை அளித்து, வாழ்க்கையில் அவர்களும் வாழ்வதற்கு வழிகாட்டுவதேயாகும்.

குருடு, செவிடு, ஊமை போன்ற உடற்குறைபாடுள்ள பிள்ளைகளைப் பொறுத்தவரை அரசாங்கம் விசேஷ பொறுப்பேற்க வேண்டும். இத்தகைய பிள்ளைகளின் தேவைகளைக் கவனிக்கும் பள்ளிக்கூடங்களும் இப்போது தனியார் முயற்சியில்தான் நடைபெறுகிறது. அத்தகைய ஸ்தாபனங்கள் பெரும்பாலான துரதிஷ்டமுடைய பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலிருக்கின்றன.

காசநோய், இருதயவியாதி போன்றவற்ருல் அவஸ்தைப்படும் பிள்ளைகளின் நிலை மிகவும் மோசமாக இருக்கின்றது. தனித்தியங்கும் ஸ்தாபனங்கள் கூட இதுவரை இவர்களைப் பற்றி எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எமது பிள்ளைகளிடையே எவருக்குக் காசநோய் அல்லது வேறு கொடிய வியாதிகள் இருக்கின்றதென்பதைக் கண்டு பிடித்து, அப்படி நோய் பீடித்துள்ளோரைக் கவனிக்கப் புறம்பான கூடங்களை நிறுவவேண்டும்.

உள்ளத்திற் குறைபாடுள்ள பிள்ளைகளுக்கும் புறம்பான பாடசாலைகள்தேவை. மாகாண வைத்தியசாலைகளில் உள்ள நரம்பு வைத்தியப் பகுதியுடன் இப்பாடசாலைகளை இணைத்து விடலாம். குறிப்பிட்ட கால அளவில் அவர்களைப் பரிசோதித்து ஒழுங்காக வைத்தியம் செய்து மிகுந்த கவனத்துடன் கண்காணிப்பது முக்கியம்.

இத்தகைய குறைபாடுகள் நிறைந்த பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடங்கள் விடுதிவசதிகளுடன் இருப்பது அவசியமாகும். ஏனெனில் தனிப்பட்ட முறையிலே ஒவ்வொருவருக்கும் அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய வசதியாக இருக்கும் நல்ல காற்று, சிறந்த உணவு, தேவையான ஓய்வு, இளைப்பாறுதல், போன்றவற்றை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். பிறநாடுகளிலே இத்தகைய பாடசாலைகள் பிரமாதமான வெற்றியுடன் நடைபெற்று வருகின்றன.

புதிய நியமனங்கள் இப்போது, வித்தியாதசிரிகளின் கீழ்ப்பிரிவுகளுக்கே சேர்த்துக் காலப்போக்கில் மேற்பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றன. சிரேஷ்ட பதவிகளிலுள்ள ஆசிரியர்களையும், பாடசாலை அதிபர்களையும் முறையே மாவட்ட வித்தியாதரிசிப்பதவிக்கும் கல்வி அதிபர் பதவிக்கும் உயர்த்திக் கொண்டு சென்ருல் வித்தியாதிகாரியின் பதவிநிலை சிறப்படையும். ஆசிரியத்களைகுறிப்பிட்ட காலத்துக்கு வித்தியாதரிசிகளாக்குவதும் பயனளிக்கக் கூடியதே. வித்தியாதிபதியின் நிர்வாகரதுக் குட்பட்டிருக்கும் இன்றைய பாடசாலைகளில் இத்தகைய வேலை மாற்றங்கள் சாத்தியமானதே அத்துடன் இது நிர்வாகத்தில் எந்தவிதமான தடங்கல்களையும் ஏற்படுத்த மாட்டாது. இன்றைய வித்தியாதரிசிகளின் வேலை நிர்வாகத்திலும் பார்க்க ஆசிரியர்களுக்கு யோசனைகள் கூறுவதாக இருப்பதால், உயர்தரப்பட்டம் பெற்றவர்களும், அனுபவம் வாய்ந்தவர்களுமான இவர்கள் உயர்தர வகுப்புக்களைப் பரிசோதிக்கவும் ஆசிரியர்களுக்குத் தேவையான, ஆக்கமுறைகள் நிறைந்த கருத்துக்களை அவர்களுக்குக் கூறவும் கூடிய நிலையில் இருப்பர். இங்கிலாந்தில் உள்ள வித்தியாதரிசிகளுடன் இவர்களை ஒப்பிடக்கூடியதாக இருக்கவேண்டும்.

# காது குத்தும் அமெரிக்கப் பெண்கள்

நியூயோர்க், ஜூன் 15

காது குத்தும் பழக்கம் தற்போது அமெரிக்கப் பெண்களிடையே கூடப் பரவ ஆரம்பித்திருக்கிறதென்று நியூயோர்க்கிலுள்ள பெரிய நகைக் கடைக்காரர் ஒருவர் கூறினர்.

பெண்களுக்கு இலவசமாக காது குத்துவதற்கு, இந்தக் கடைக்காரர் ஒருவரை நியமித்திருக்கிருர். இதுவரையில் சுமார் ஒரு லட்சம் அமெரிக்கப் பெண்கள் இலவசமாகக் காது குத்திக் கொண்டதாக அவர் கூறினர்.

# காலஞ்சென்றபிரதமர் ஞாபகார்த்தவிடுதி
## ஸ்ரீமதி பண்டாரநாயக்கா திறந்துவைத்தார்

கொழும்பு, வியாழன்

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஞாபகார்த்தமாக, ஞாபகவிடுதி ஒன்றை பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா இன்று தொம்பே என்ற இடத்தில் திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் பாதுகாப்பு - வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, மந்திரி மைத்ரிபாலசேனநாயக்கா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாதிரி இதுவரை எவ்வளவோ செய்திகள் வெளியாகிவிட்டன. ஆனுல் கண்ட பலன் ஒன்றுமில்லை. இப்போது வெளியான செய்தி வெறும் கண்துடைப்பாக இல்லாமல் உண்மையாகுமா? பொறுத்துப்பார்ப்போம்.


இரண்டாவது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு) — மொடர்ன் (பதுளை)

★ அன்பும் பண்பும் அமைந்த அருங்குணவதி நீ. உன் வரவால் என் வாழ்வு உயர்ந்தது. உன் மனம் பரிசுத்தமானது. உன் செய்கைகள் யாவுமே பரிசுத்தமானது. என் வாழ்வு உள்ள மட்டும் நீ என் நெஞ்சிலே நிறைந்த நித்திய பாக்யவதி.

★ அவ்வளவு என்னைப் புகழவேண்டாம் அத்தான். எனக்கு அன்னையும், அப்பனும் ஆண்டவனும் நீங்களே. பொன், பொருள் ஒன்றும் நான் உங்களுக்கு கொண்டுவரவில்லை. ஆனுல் தூய்மையிலேயே தொடுக்கப்பட்ட என் மனத்தையும், உயிர் சேர்ந்த உடலையும் உங்கள் சேவைக்காக அர்ப்பணித்து வாழ வந்திருக்கிறேன். நீங்களே எனக்கு நிலையான துணை.

இவையாவும் இணைக்கப்பட்ட தீந்தமிழ் திரைவிருந்து



பாலாஜி ★ பண்டரிபாய்
ராஜகோபால் ★ மைனுவதி
ஏ. கருணுநிதி ★ எம். சரோஜா

நடித்த எங்கள் குலதேவி

டைரக்ஷன்: ஏ. சுப்பராவ் — சங்கீதம்: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்
ஜெமினி கணேசன் - பத்மினி நடித்த ஆசை

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 5-45க்கும்
சனி, ஞாயிறு பி. ப. 2-30, 5-30க்கும்
பிரேம் நசீர் நடித்த மந்திரவாதி

தினசரி 2-00, 3-45க்கு — சனி, ஞாயிறு 10-30க்கு
டிம்புக்டு
TIMBUKTU
(ENGLISH)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.